விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 23 திங்கட்கிழமை (09.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 294

## 10 இந்திய மீனவர் கைது; 20 வரை விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

படகொன்றில் காரைக்காலில் இருந்து மீன்பிடிப்பதற்காக புறப்பட்ட 10 இந்திய மீனவர்களே இவ்வாறு இலங்கை கடற்படையின 24

## 'ஒற்றையாட்சி'க்குப் பதில் 'ஐக்கிய' இடம்பெறவேண்டும்!

### விக்னேஸ்வரன் வலியுறுத்தல்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பில்இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசு "Unitary (Ekiya)" என்று அழைக்கப்படுவதற்குப் பதிலாக இலங்கை ஒரு "ஐக்கிய" நாடு என்றே "Unitary (Ekiya)" என்றே அழைக்கப்பட வேண்டுமென்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 23



## நல்லாட்சிக்கு எதிராக நாமல் சூளுரை

(கொழும்பு)

நாட்டின் தேசிய வளங்களை விற்பனை செய்வதற்கு எதிரான போராட்டத்தினை தொடர்ந்தும் முன்னெடுப்போம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார். 23

# தமிழ் அரசியல் கைதிகளுக்காக

# வடக்கில் இன்று மாபெரும் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் இன்று 15 ஆவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்து வரும் தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவாகவும் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற கோரியும் இன்று வடக்கில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. 23

## கொட்டும் மழையிலும் தொடரும் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முல்லைத்தீவில் கடந்த மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த போராட் 23

## வரவு செலவுத்திட்டம் இன்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர இந்த சட்டமூலத்தின் முதல் வாசிப்பை மேற்கொள்ளவுள்ளார். (மு)

## கைதிகளை விடுவிக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் காணப்படும் சில விடயங்கள் இங்கு ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் சமாதானத்தையும் சகவாழ்வையும் திரும்பச் செய்ய 29.07.1987ஆம் 23

## மூவரின் உடல்நிலை மோசமடைந்தது; அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதி

(அநுராதபுரம்)

உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள அரசியல் கைதிகளது உடல்நிலை மோசமடைந்ததனையடுத்து அவசர அவசரமாக அநுராபுரம் அரசினர் வைத்தியசாலையில் நேற்றிரவு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 14 நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்த அரசியல் கைதிகள் மூவரும் நேற்றுக் காலை முதல் 23

## தமிழ் அரசியல் கைதிகள் அனுபவித்த துன்பம் போதும்

### – ரில்வின் சில்வா

(யாழ்ப்பாணம்)

சிறைகளில் உள்ள அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் 23



## தொலைபேசி மூலம் அழைத்து இளைஞன் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞனை இனம் தெரியாத நபர்கள் வழிமறித்து வாளால் வெட்டியதில் கைகளில் படுகாயமடைந்த நிலையில் குறித்த இளைஞன், யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் வடக்கை சேர்ந்த கே.விஜிதரன் (வயது 22) என்பவரே மேற்படி காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்றையதினம் மாலை வீட் 23

## மாகாணங்களை இணைக்க தேவையில்லை; புதிய அரசியலமைப்புக்கு இனவாதிகள் தடை

### ஜே.வி.பி. யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள மக்களின் ஜனநாயகத்தை, உரிமையை, சமத்துவத்தை உறுதிப்படுத்துகின்ற ஓர் அரசியல் யாப்புக்கு மக்கள் விடுதலை முன்னணியானது ஆதரவளிக்கும் எனவும், ஆனால் தற்போது வடக்கு மற்றும் தெற்கிலுள்ள அரசியல்வாதிகள் இனவாதத்தினை பேசி அத்தகைய ஓர் அரசியல் யாப்பானது உருவாகுவதை தடை செய்வதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின்செயலாளரும்பாராளுமன்ற உறுப்பினருமான 23

## புதிய அரசமைப்பை தோற்கடிக்க இராணுவத்தை நாட மகிந்த அணி முடிவு



(கொழும்பு)

புதிய அரசமைப்புக்கான முயற்சியை அடியோடு தோற்கடிக்க இராணுவத்திடம் உதவிகோர மகிந்த அணி முடிவுசெய்துள்ளது.

புதிய அரசமைப்புத் தொடர்பில் நாட்டு மக்களுக்குத் தெளிவு

## சிறுமியின் முகத்தில் மிளகாய்த் தூள் தூவி தங்கச்சங்கிலி அபகரிப்பு

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள மந்துவில் 08ஆம் வட்டாரம் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் ... விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த மாணவியின் முகத்திற்கு மிளகாய்த் தூள் வீசி விட்டு அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் அபகரித்துச் சென்றுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பதியானை வேண்டினார் ஜனாதிபதி மைத்திரிபால



(சென்னை)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அதிகாலை திருப்பதி ஏழுமலையான் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டார்.

நேற்று முன்தினம் பெங்களூரு வழியாக திருப்பதி சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவரது துணைவியார் ஜெயந்தி புஸ்பாகுமாரி, மகன் தஹம் சிறிசேன ஆகியோர் பத்மாவதி விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தனர்.

இதனையடுத்து நேற்று அதிகாலை அவர்கள ஏழுமலையான் ஆலயத்தில் சுப்ரபாத சேவையின் போது வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இதன்போது திருப்பதி ஆலயத்தின் சார்பில், நிர்வாகிகள் மற்றும் அதிகாரிகளால் ஜனாதிபதி கௌரவிக்கப்பட்டு ஆலய பிரசாதமும் வழங்கப்பட்டது.

ஜனாதிபதி சிறிசேன கடந்த 2015 ஆம் ஆண்டு பதவியேற்ற பின்னர் திருப்பதிக்குப் பயணம் மேற்கொண்ட மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும். (மு)


**கனரக வாகன சாரதி தேவை**

கனரக வாகன சாரதி (AD) உடன் தேவை. அனுபவம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

(இ952) **077 203 0309**

**Paper Classes**

Maths & English
G.C.E (O/L) 2017.
Commences on 11.10.2017
**No.886, Hospital Road, Jaffna.**
For Further Details
**0779789112, 0779352999**

**WESTERN UNION WU**
moving money for better
அமெரிக்க லொத்தர் விசாக்களுக்கான பதிவுகளை முன்கூட்டியே எம்மிடம் பதிவு செய்து கொள்ளலாம்.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com


# தாய்வானில் கொள்ளையிட்ட பணம் இலங்கை வங்கியில் வைப்பு!

(கொழும்பு)

தாய்வானின் ஃபா ஈஸ்டர்ன் இன்டர் நெஷனல் வங்கியின் கணினி கட்டமைப்பிற்குள் ஊடுருவி பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் அந்நாட்டுப் பிரதமர் லேய் ச்சின் டேயின் உத்தரவின் பேரில் விரிவான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொள்ளையிடப்பட்ட சுமார் 60 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (900 கோடி ரூபாய்) இலங்கை, கம்போடியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக தாய்வான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஃபா ஈஸ்டன் இன்டர்நெஷனல் வங்கியிடமிருந்து இலங்கை வங்கியின் தனியார் கணக்கில் வைப்பிலிடப்பட்ட 1.1 மில்லியன் அமெரிக்க டொலர் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த பணத்தில் சுமார் 30 இலட்சம் ரூபாயை கடந்த 4-ம திகதி கணக்கின் உரிமையாளர் மீளப் பெற்றுள்ளதுடன் மீண்டும் 8 மில்லியன் ரூபாயை கடந்த 6-ம் திகதி மீளப் பெறுவதற்கு முயன்ற போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து எதிர்வரும புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபருடன் பணத்தை மீளப் பெறுவதற்காக குறித்த வங்கிக்கு வந்த மற்றுமொருவரை கைது செய்வதற்காக வங்கியின் சிசிரிவி காணொளிகளை அடிப்படையாக கொண்டு விசாரணை நடத்தப்படுவதாக உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (மு)


**RAVEENS EMC - KARAVEDDY**

GRADE 6 ADMISSION - 2018
ENGLISH MEDIUM
ADMISSION FORMS ARE AVAILABLE AT THE OFFICE
☆ ONLY Grade 5 Scholars can APPLY.
☆ Closing Date :- 20.10.2017
Students will be recruited according to the **Admission Test**
021 226 3321
P.Easwaranathan
Director
BSc.(Hons) Agric Dip.in Edu
(சீ-9939)


# 12-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1931 . 04 . 06

மறைவு 2005 . 09 . 21

**பொன்னுத்துரை நாகேந்திரம் (ஓவசியர்)**

ஆண்டுகள் பன்னிரெண்டு ஆனாலும் உங்கள் அன்பின் அணைப்பு என்றும் மனதை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(953)


**அமெரிக்க லொத்தர் விசா**

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவ்ச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

**0768226243**

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

இங்கே வேலை தேடிக்கொண்டிருந்த சாதாரண இளைஞர்களில் நானும் ஒருவன் V2 Travels ல் பதிந்தேன் இப்பொழுது நிரந்தர விசாவுடன் அமெரிக்கா வந்து இறங்கியவுடனேயே பெரிய நிறுவனத்தில் வேலை செய்கிறேன். எனது வாழ்க்கையில் திடீர் அதிஸ்டத்தினை ஏற்படுத்திய **V2 Travels** நிறுவனத்தினருக்கு எனது நன்றிகள்.



மு.பானுதரன் - நெல்லியடி
அமெரிக்க விசா வெற்றியாளர்

(C-9942)

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி, பளைய ஆஸ்பத்திரிக்கு எதிரே | 10,பேருந்து நிலையம் | முடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 03 . 01 . 1964

விண்ணில் 21 . 10 . 2015

**Dr.K.ஜீவராசன்**

அப்பா எங்களுடன் எப்போதும் வாழ்கின்றார் என்கின்ற நினைவோடு எம் வாழ்வு நகர்கிறது. தப்பாது இறையடியில் நித்திய சாந்தி பெற எப்போதும் மலர் தூவி இறைவனை இறைஞ்சுகின்றோம்!

3-ம் வட்டாரம்,
கலாவீதி, முள்ளியவளை.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்.

(864)

# கண்ணீர் அஞ்சலி



**உயர்திரு. நா.இராமச்சந்திரன் (J.P)**

மண்டைதீவு திருமுறைக்கழகத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் மூத்த ஊடகவியலாளரும் சிறந்த எழுத்தாளருமான உயர்திரு.

**நா.இராமச்சந்திரன் (J.P)**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**- திருமுறைக் கழகம், மண்டைதீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் இன்று பாராளுமன்றத்தில்

## நிதியமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பிக்கிறார்



அடுத்த வருடத்திற்கான வரவு- செலவுதட திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர இன்று பாராளுமன்றத்தில் இந்த சட்டமூலத்தின் முதல் வாசிப்பை மேற்கொள்ளவுள்ளார்.

வரவு- செலவுத் திட்டம் முன்வைப்புக்கு முன்னதாக, அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடு இந்த சட்டமூலத்தின் ஊடாக கோரப்படும்.

நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் அரச செலவீனம் 3982 பில்லியன் ரூபாய் ஆகவும் அரச வருமானம் ஏறக்குறைய 2175 பில்லியன் ரூபாய் ஆகவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் பாதுகாப்பு செலவினம் 29 ஆயிரம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம்நவம்பர் மாதம் 10ம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆயுதத்தால் அடித்து ஒருவர் படுகொலை

களுத்துறை பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த நபரை இனம் தெரியாத சிலர் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, படுகாயமடைந்த அவர் நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை பலியாகியுள்ளார். மேலும், இந்த சம்பவத்தில் களுத்துறை தெற்கு பகுதியைச் சேர்ந்த 43 வயது நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார். இக்கொலைக்கான காரணம் இதுவரை தெரிய வரவில்லை.

சந்தேகநபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# மகிந்தவுடன் கூட்டணி சேர 20 கட்சிகள் பேச்சுவார்த்தை



எதிர்வரும் தேர்தல்களின் போது கூட்டணியாக இணைந்து போட்டியிடுவது குறித்து மகிந்த தரப்புடன் ஏராளம் கட்சிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

தற்போதைய நிலையில் சுமார் 20 அரசியல் கட்சிகள் இது தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் போது பாரிய கூட்டணியொன்றை அமைத்துக் கொண்டு தேர்தலை எதிர்கொள்வது மகிந்த ராஜபக்ஷவின் நோக்கமாகும்.

அதற்காக பொதுஜன பெரமுனவின் தாமரை மொட்டு சின்னத்தில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ள கட்சிகளை இணைத்துக் கொண்டு பாரிய அரசியல் கூட்டணியொன்றை அமைத்துக் கொள்ள அவர் தயாராகி வருகின்றார்.

தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னரே தேர்தலில் போட்டியிடவுள்ள சின்னம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரியவந்துள்ளது.

அத்துடன் மகிந்தவின் புதிய கட்சியை அரசியல் கட்சியாக பதிவு செய்து கொள்வதற்கான ஆவணங்கள் தயார் படுத்தப்பட்டுள்ளதுடன், தேர்தல் அறிவிப்பின் பின்னர் அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று தெரியவந்துள்ளது. (இ-7)

# ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் கடல்,ஆகாயம்கூட விற்பனை

## அமைச்சர் மனோ சுட்டிக்காட்டு



நல்லாட்சி அரசாங்கம் நாட்டை விற்பதாக கூறினாலும், உண்மையில் கடல், நிலம் மற்றும் ஆகாயம் எனும் மூன்றையும் ராஜபக்ஷர்களே விற்றுள்ளார்கள் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தேசிய சகவாழ்வு கருமமொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை நேற்று கொழும்பு, கொட்டாஞ்சேனையில் இடம் பெற்றது.

மக்கள் நலன் கருதி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் இந்த வேலைத்திட்டத்தில் அமைச்சர் மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுடைய தேவை, நேரம், பண விரயம் கருதி அரசாங்கத்தினால் இந்த நடமாடும் சேவை திட்டம் நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்றிட்டங்கள் இன, மத, பேதம் இன்றி அனைத்து மக்களின் நலன் கருதி செயற்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான சந்தர்ப்பத்தில், அம்பாந்தோட்டை பகுதியில் நாட்டின் வளங்களை நல்லாட்சி அரசாங்கம் வேறு நாட்டிற்கு விற்றுள்ளதாக தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

உண்மையை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். உண்மையாக நாட்டை விற்றது ராஜபக்ஷர்களே. போட் சிட்டியில்வானத்தையும், கற்பிட்டியில் கடலையும், பொலநறுவையில் நிலத்தையும் ஏனைய நாடுகளுக்கு விற்றது ராஜபக்ஷர்களே.

இதேவேளை, அவர்கள் விட்டுச்சென்ற கடனை அடைப்பதற்காகவே இடங்களை நாங்கள் குத்தகைக்கு தருகின்றோம். இதனையே அவர்கள் நாட்டின் வளங்களை நாம் விற்பதாக அனைவருக்கும் தெரியப்படுத்த முனைகின்றனர் என அமைச்சர் மனோ சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# மண்ணையா நாங்கள் சாப்பிடுவது?




(கொழும்பு)

பொருள் விலையும் வரிச் சுமையும் கடன்களும் பில்லுகளும் தாங்க முடியவில்லை. அரிசி 100 ரூபாய், தேங்காய் 100 ரூபாய்! நாங்கள் மண்ணையா சாப்பிடுவது ? என கேள்வி எழுப்பும் சுவரொட்டிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு நகரெங்கும் பரவலாக ஒட்டப்பட்டு ள்ளன.

முன்னிலை சோஷலிஸக் கட்சியால் ஒட்டப்பட்டுள்ள அந்த சுவரொட்டிகளில் "சம்பளத்தைக் கூட்டு" என்றும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மட்டு.மாவட்ட அரச அதிபரை நியமிப்பதில் அரசு-கூட்டமைப்பு இடையே இழுபறி

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான புதிய அரசாங்க அதிபர் நியமனம் தொடர்பாக அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கடும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அரச அதிபராகப் பணியாற்றிய பி.எம்.எஸ்.சார்ள்ஸ் அண்மையில் சுங்கப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதை அடுத்து, மட்டக்களப்பு அரச அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பதவிக்கு நியமிப்பதற்கு நிர்வாக சேவை தரம்-1 ஐ சேர்ந்த மூன்று அதிகாரிகளின் பெயர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரிந்துரை செய்திருந்தது. அவர்கள் இலங்கையின் முக்கிய அமைச்சுக்களில் பணியாற்றுகின்றனர்.

எனினும், அரசாங்கம் கிழக்கு மாகாணசபையிலுள்ள மற்றொரு நிர்வாக சேவை அதிகாரியை அந்தப் பதவிக்கு நியமிக்கத் திட்டமிட்டுள்ளது. குறித்த அதிகாரியின் பதவிக்காலம் முடிவடையவுள்ள நிலையிலேயே அவரை மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக நியமிக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் மற்றும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் ஆகியோர் மூன்று பேரின் பட்டியலை உள்துறை அமைச்சின் செயலர் நீல் டி அல்விசிடம் பரிந்துரை செய்திருந்தனர்.

கடந்தவாரம் மாவட்ட அரச அதிபரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு இடம்பெற்றது.

அரசினால் முன்மொழியப்பட்டவர் உள்ளிட்ட இரண்டு மேலதிக நிர்வாக சேவை அதிகாரிகளும் நேர்காணல் செய்யப்பட்டனர். எனினும் எவரும் தெரிவு செய்யப்படவில்லை.

இதனால் கடந்த மாதம் 29ஆம் திகதியிலிருந்து மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. (இ-7)

# ஒற்றைக் கண்ணைத் திறந்த சனீஸ்வர பகவான்

## பார்க்க பக்தர்கள் படையெடுப்பு





மட்டக்களப்பு வாழைச் சேனை, [illegible] ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் சனீஸ்வரர் விக்கிரகத்தின் கண் திறந்த நிலையில் காணப்படுவதால் மக்கள் திரண்டு சென்று பார்வையிடுகின்றனர். ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.எஸ். கண்ணன் குருக்கள் நேற்று முன்தினம் காலை பூசை செய்யும் போது விக்கிரகத்தில் ஒரு மாற்றம் காணப்படுவதை அறிந்தார். ஆலயத்திற்கு வந்த பக்தர் ஒருவரும் அதனை பார்த்துள்ளார்.

சனீஸ்வரர் வலது கண் திறந்த நிலையில் தென்பட்டதை கண்டு ஆலய நிர்வாகத்தினரிடம் தெரிவித்ததுடன், இச்சம்பவத்தை கேள்வியுற்ற பக்தர்கள் பெருந்திரளாக ஆலயத்திற்கு வருகை தந்து பார்வையிட்டனர். புரட்டாதி மூன்றாவது சனி என்பதால் சனீஸ்வரர் விக்கிரகம் கண் திறந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பதற்காக இந்நிகழ்வு இடம்பெற்றிருக்கலாம் எனவும், மெதுவாக கண் மூடும் நிலைமை காணப்படுவதாகவும் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. எஸ்.கண்ணன் குருக்கள் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்





## முருகேசு கார்த்திகேசு

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும் மணியந்தோட்டத்தை வசிப்பிட மாகவும் கொண்ட முருகேசு கார்த்திகேசு நேற்று (08.10.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - இராமாசி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் சுமதியின் (கருணா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தங்கம்மா மற்றும் கணபதிப் பிள்ளை, குஞ்சுமணி, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பாலாம்பிகை, தங்கம்மா, வேலாயுதம், பரமலிங்கம், பலசாலி, மயில்வாகனம், தேசோவதி (வாணி) மற்றும் சாந்தா (கிளி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மகாலட்சுமி (சாந்தி) (ஊற்றுப்புலம், கிளிநொச்சி), காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் பாஸ்கரன் (நந்தினி பேக்கரி, கொக்குவில்), சுதாமதி, தணமதி (சாரதா - ஸ்கந்தபுரம், கிளிநொச்சி), ரவீந்திரன் (யாழினி ரான்ஸ்போட்), செந்தில்குமார் (மாவீரர் நல்லமுத்து), விக்கினேஸ்வரன் (நிவேதினி வெதுப்பகம், முல்லைத்தீவு), சிவகுமார் (அண்ணா பேக் ஹவுஸ், முள்ளியவளை), இந்துமதி (முல்லைத்தீவு) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரன், ஜெஸ்மின் சுதா, சந்திரகுமார், கிருஸ்ணவேணி, றஜிதா, சுதா, ரவிக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் யசோதினி, சுதர்சன் (முகிலன் வெதுப்பகம், ஊற்றுப்புலம்), சுகந்தினி, யசோதரன் (மாவீரர் முகிலன்), ஜெயந்தினி, வினோதினி, கங்காதரன், நிவேதினி, நிவேதிகா (மருத்துவபீட மாணவி - யாழ்.பல்கலைக்கழகம்), நிவேதிகன் (உயர்தர மாணவன் - யா/புனித பத்திரிசியார் கல்லூரி), நித்தியன் (உயர்தர மாணவன் - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), சிந்துயன், துவார கன், யாழினி, நிதுஷன், தாமிளன், புகழினி, கம்சாயினி, கிருசாளினி, டிலானி, விதுரன், சுவிசிகா, யதுஷா, சஞ்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் கயூரி, ஜஸ்ணவி, கண்ணாளன், அரவிந்தன், ஐங்கரன், தமிழினி, கஸ்மிகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.43, 1ம் குறுக்குத்தெரு, மணியந் தோட்டத்தில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (09.10.2017) பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.43, 1ம் குறுக்குத் தெரு,
மணியந்தோட்டம், யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்

(C-9941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்.சபாநாயகர் சுமித்ரா மகாஜன் சீத்தாஎலியவில் வழிபாடு



இந்தியாவின் சபாநாயகர் சுமித்ரா மகாஜன் தலைமையிலான குழுவினர் நுவரெலியா சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்திற்கு விஜயம் செய்து விசேட பூஜை வழிபாடுகளில் நேற்று ஈடுபட்டனர். இதன் போது, ஆலயத்தின் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையிலான நிர்வாக சபை உறுப்பினர்கள் அவர்களை வரவேற்றதுடன் நினைவுப் பரிசுகளையும் வழங்கினர். (இ-7)


## சுயதொழில் வாய்ப்பு

முல்லைத்தீவு பகுதியில் ஒரே இடத்தில் சுயமாக மாடு வளர்க்கவும் ஊடு பயிர் செய்யவும் ஆர்வமுடையவர்கள் தொடர்பு கொள்ளவும். (சி-9936)

தொடர்பு: 077 168 1697


# மரண அறிவித்தல்

## திருமதி அருளம்பலம் இரத்தினேஸ்வரி



சங்கானையைப் பிறப்பிடமாகவும் அள வெட்டி மேற்கு, தம்மளையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி அருளம்பலம் இரத்தினேஸ்வரி 06.10.2017 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக் கரசு திருநாமம் தம்பதியரின் மகளும், காலஞ் சென் றவர்களான கந்தவனம் நாகம்மா தம்பதியரின் மரு மகளும், காலஞ்சென்ற அருளம்பலத்தின் (T.O) மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, செல்வரத்தினம், குணரத்தினம், பரமேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி (கனடா), சிவசுப்பிரமணியம் (அவுஸ்தி ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காமாட் சிப்பிள்ளை, இந்திராணி (அவுஸ்திரேலியா), சுகுணவதி, காலஞ்சென்றவர்களான தனபாக்கிய லச்சுமி, திலகவதி, மார்க்கண்டு, இலட்சுமிஅம்மா, புனிதவதி, நித்தியானந்தன் ஆகியோரின் மைத் துனியும், கேதீஸ்வரன் (U.K), சுரேஸ்வரன் (U.K), யுமுனா (சமுர்த்தி முகாமையாளர் பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்), யோகீஸ் வரன் (ஆசிரியர் சண்டிலிப்பாய் வடக்கு த.க.பா.), ஞானேஸ்வரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் வீதி அபிவிருத்தித் திணைக்களம் முல்லைத் தீவு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சியாமளா (U.K), தாரணி (U.K), அருள்ராஜ் (ஆசிரியர் பண் டத்தரிப்பு பெண்கள் உயர் தரப் பாடசாலை), அருந்ததி, சுகந்தினி (தபால் அதிபர் தெல்லிப் பழை) ஆகியோரின் அன்பு மாமியாரும், டிஷானி (U.K), டிலானி (U.K), துஷான் (U.K), கிஷான் (U.K), சுவேதன், சதுர்த்திகன், நிகேதன், ஜெனனி, பிரவீனா, திலக்ஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.10.2017 ஞாயிற்றுக்கிழமை நேற்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். (934)

தம்மளை அளவெட்டி, மேற்கு. 077 364 4121

தகவல்: பிள்ளைகள், குடும்பத்தினர்.

# ஆத்மசாந்தி பிரார்த்தனை

அமரர்

## அருணாசலம் சுப்பிரமணியம்

(இல 2, கணேசபுரம், கிளிநொச்சி)

(கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான உபசெயலாளர்)

மண்ணில் 1946 – 01 – 18



விண்ணில் 2017 – 10 – 07

எமது ஆலயத்தின் கௌரவ உபசெயலாளராக இருந்து தொண்டாற்றி ஆலய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு ஆன்மீகப்பணி, அறப் பணிகளை மேற்கொண்ட அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த் திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இன்று அவரது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும். (சி-9936)

அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம், கிளிநொச்சி.

ஆலய பரிபாலன சபையினரும் குருமார்களும், பணியாளர்களும்.

# இராசி பலன்

09.10.2017
(புரட்டாதி 23, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சதுர்த்தி மாலை 5.37 மணிவரை
கார்த்திகை மாலை 5.52 மணிவரை
சுபநேரம்- 12.02-1.32 மணிவரை
இராகுகாலம்- 7.32-9.02 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்,
கார்த்திகை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சுவாதி- விசாகம் | | ராகு |
| கேது | | | செவ், சுக் |
| | சனி | குரு | சூரி, புத |

**மேடம்:** வார்த்தையில் நிதானம் தேவை, எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**இடபம்:** சிந்தனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** சயன சுகக்குறைவுகள் ஏற்படலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தில் சற்று அலைச்சல்கள் அதிகரிக்கலாம்.

**கடகம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**சிம்மம்:** செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், விருந்துகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், குடும்பத்தினரிடையே சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டு.

**தனுசு:** செய்தொழில் சிறப்புக்கள் வந்து சேரலாம், எதிரிகள் விலகுவர், உடல் நலனில் முன்னேற்றம் ஏற்படலாம், காரிய அனுகூலமுண்டு, போசன நன்மை உண்டு.

**மகரம்:** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் உண்டு, புதிய முயற்சிகளில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கும்பம்:** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பெரிய மனிதர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மீனம்:** உறவினர்களின் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, போசன நன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



யாழ். விக்னேஸ்வரக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாண கல்வியமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (படங்கள்:- மகாலிங்கம்)

# மதுபான விலைக்குறைப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

## அரிசி விலையை குறைக்கக்கோரிக்கை







சங்கானை பேருந்து தரிப்பு நிலையத்திற்கு முன்பாக வடபிராந்திய நல்லொழுக்க சம்மேளனத்தினர் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

எதிர்வரும் ஆண்டின் வரவு- செலவுத் திட்டத்தின் போது மதுசார வகைகளின் விலைகுறைப்பு மற்றும் இலகுவான முறையில் அனுமதிப் பத்திரங்களைப் வழங்குதல் எனப் பல ஆலோசனைகளை முன் வைக்கவுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவ்வார்ப்பாட்டம் இடம்பெற்றது. இதே வேளை

•வரவு-செலவுத் திட்டத்தில் அரிசி விலையை குறை பியர் சாராய விலையை அதிகரி

•நல்லாட்சி அரசே எங்கள் விவசாயிகளுக்கு சலுகை வழங்கு, பியர், சாராய விலையை உயர்த்து

•நல்லாட்சி அர சாங்கத்தை தெரிவு செய்தது பியர், சாராய கம்பனிகளிற்கு வக்காளத்து வாங்கவா?

•நல்லாட்சி அரசாங்கத்தில் புதிய சாராயக்கடைகளுக்கு இடமளிக்காதே.

•2018 ஆம் ஆண்டு வரவு- செலவுத்திட்டத்தில் அதிகம் பயன் பெறப்போவது பியர் கம்பனியா?

•வரவு- செலவுத் திட்ட வாசிப்பின் போது பியர் கம்பனிகளிற்கு வக்காளத்து வாங்கும் அரசியல்வாதிகளை வீட்டுக்கு அனுப்புவோம்

•மது வரித் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் சட்ட திட்டங்களை மாற்றாதே

•சாராய கடைகளிற்கு புதிய அனுமதிகளை வழங்காதே

போன்ற பல கோஷங்களை எழுப்பிய வண்ணம் ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாகைகளையும் தாங்கியிருந்தனர். (இ-7)

# யாழ்.இந்துவின் விவாதமேடை இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துவின் விவாத மேடை இன்று 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் மாணவன் சி. விஷாகனன் தலைமையில் கல்லூரி முதல்வர் ஐ. தயானந்தராஜா முன்னிலையில் இடம்பெறும்.



இதில் பிரதம விருந்தினராக சொல்வேந்தர் சுகி. சிவம் கலந்துகொள்வார்.

இன்றைய "தமிழ்த் தேசிய அரசியல் சூழ்நிலையில் இளைஞர்களின் விழிப்புணர்வு போதுமானது,போதுமற்றது" எனும் தலைப்பில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ் சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் நடுவராகப் பங்கேற்கும் விவாத அரங்கு இடம்பெறும்.

இதில், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கு.பாலசண்முகன், அகில இலங்கைக் கம்பன் கழக இளநிலை நிர்வாகத் தலைவர் செ.சொபிசன், முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், ஊவாவெல்லஸ பல்கலைக் கழக உதவிப்பதிவாளர் இ. சர்வேஸ்வரா, யாழ். பல்கலைக்கழக சட்டபீட மாணவன் ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ, யாழ்.இந்துக் கல்லூரி விவாத மன்றத் தலைவர் சி.விஷாகனன் ஆகியோர் வாதிடுவர். (இ-7)





# சிங்கை ஆரம் மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச கலாசார பேரவையின் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் சிங்கை ஆரம்-2 பிரதேச மலர் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2 மணியளவில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலரும் கலாசார பேரவை தலைவருமான திருமதி ஏ.அன்ரன் யோகநாயகம் தலைமையில் இடம்பெறும். (இ-7)

# விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் பலி

(சாவகச்சேரி)

மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார். இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.40 மணியளவில் தென்மராட்சி எழுதுமட்டுவாழ் பகுதியில் இடம்பெற்றது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம் சிவானந்தன் (வயது-36) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தவிபத்துச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-29-89-103)

# வியாபார நிலையங்களில் மரக்கறி விற்பதற்கு தடை

பண்டத்தரிப்பு சந்தை மரக்கறி வியாபாரிகளின் நலன் கருதி சந்தையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குட்பட்ட வியாபார நிலையங்களில் மரக்கறி விற்கத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நடவடிக்கைக்கு ஏனைய வியாபார நிலையங்களின் வர்த்தகர்கள் ஒத்துழைப்பு வழங்கியிருப்பதாகவும் மானிப்பாய்பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர். (இ-10-102)

# தீபாவளியை முன்னிட்டு நேரக்கட்டுப்பாடு தளர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 11.10.2017 தொடக்கம் 17.10.2017 வரையான காலப்பகுதியில் நேரக்கட்டுப்பாடு தளர்த்தப்படுவதோடு 15.10.2017 ஞாயிற்றுக்கிழமை தொழில் நிலையம் திறந்துவேலை செய்வதற்கு அனுமதி வழங்கப்படுவதோடு 18.10.2017 தீபாவளி தினத்தன்று விடுமுறை தினமாகும்.

அன்றைய தினம் தொழில் நிலையங்கள் மூடப்பட வேண்டும். அத்தோடு 19.10.2017 தொடக்கம் வழமையான நேரக்கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் சமாச யாப்பிற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்வதோடு அதனை மீறிச் செயற்படுகின்ற வேளைகளில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு சமாச நிர்வாகம் பொறுப்பில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்விடயத்தில் [illegible] யாளர்கள் எமது நேரக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை எமது அங்கத்தவர் மூலமாக அறிந்து எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது. (இ



இளவாலை மாரீசன்கூடல் றோமன் கத்தோலிக்க பாடசா அதிபர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைய இளவாலை ருத்துப்படாத வாலிபர் சங்கத்தின் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் கீழ் அப்பாடசாலை மாணவர்கள் 22 பேருக்கு கற்றல் உபகரணங்கள், பாடசாலைப் புத்தகப் பைகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.



கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் நிதியுதவியில் வடமராட்சி கிழக்கு உடுத்துறை கடற்றொழிலாளர் பயன்பாட்டுக்கான புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் பொ.பிறேமதாஸ், யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.சுதாகர் மற்றும் சங்கப் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-பொற்பதிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# நாட்டில் மீண்டும் ரத்த ஆறு வேண்டாம்

## அமைச்சர் கிரியெல்ல வேண்டுகோள்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பே நல்லிணக்கத்தை உருவாக்கும் புதிய ஆரம்பமாகும். புதிய அரசியல் அமைப்பினைத் தடுக்க குழப்பங்களை ஏற்படுத்தி நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடவிட வேண்டாமென அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முதல் தடவையாக தமிழர் தலைமைகள் அரசியல் அமைப்பினை விருப்புடன் ஆதரித்து வருகின்றன. இந்த வாய்ப்பினை நழுவ விடக் கூடாது. இதைவிட நல்லதொரு வாய்ப்பு இனி ஒருபோதும் கிடைக் கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

புதிய அரசியல் அமைப்பில் பிரதான விடயங்களில் குழப்பங்கள் இருப்பதாக மாநாயக்க தேரர்கள் மத்தியில் பொது எதிரணியினர் குற்றம் சுமத்தி வரும் நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல அஸ்கிரிய மாநாயக்க தேரர்களை சந்தித்து தெளிவுபடுத்திய நிலையில் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 5 வருட அபிவிருத்தித் திட்டங்கள்

ஜனவரி மாதம் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் தேசிய மற்றும் நல்லிணக்க காரியாலயமொன்று அமைக்கப்பட்டது. அதில் தலைவராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தமது தலைமையின் கீழ் வடக்கு கிழக்கில் பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துள்ளார்.

அக்காரியாலயம் மூலம் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் பங்களிப்புடன் வடக்கு-கிழக்கில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக விரிவான ஐந்து ஆண்டு மாவட்ட அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. வடக்கு- கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்ட செயலாளர்களூடாக செய்யப்பட்ட ஆய்வின்படி 8 மாவட்டங்களிலும் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வாழ்க்கை மூலோபாய அபிவிருத்தித் திட்டம், கிராம அபிவிருத்தித் திட்டம், கடன் ஆலோசனை முறை, கிராமிய அடிப்படை வசதிகள், மீன்பிடி மற்றும் சமூக நீர்வழங்கல்திட்டம்போன்ற பல திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

இத் திட்டத்தின் மூலம் வீட்டுத் தலைவியாக உள்ள பெண்கள், விதவைகள், வேலையற்ற இளைஞர்,யுவதிகள் தொழில் வாய்ப்புக்களைப் பெற்று தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கும். அரச மற்றும் தனியார் வங்கிகளினூடாக தனி நபரொருவர் குறைந்தபட்சம் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வரை கடனைப் பெற்றுக் கொள்ளலாம்.

அனைத்து தொழில் திட்டங்களுக்கும் மொத்த கடன் தொகையில் 25 சதவீதத்தை தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அமைச்சு வழங்குவதோடு அதற்கான வட்டியை அக் காரியாலயமே வழங்கும்.. அவ்வாறான 400 திட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கக் காரியாலயம் 1100 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. அத்திட்டங்கள் அனைத்தும் 2017ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் நிறைவேற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் 5 இலட்சம் பேரின் அடிப்படைத் தேவைகளும் மற்றும் அவர்களின் பொருளாதாரமும் வளம்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நல்லிணக்கக் காரியாலயத்தில் பூரண அனுசரணையுடனும்ஆலோசனையுடனும் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் எதிர்கால பரம்பரையை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்லும். துளி நீர் வழங்கல் விவசாய பயிற்சியின் கீழ் சிறிய அளவிலான விவசாயிகளின் தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. சம்பிரதாய விவசாய முறைகளைவிட மிகக் குறைந்தளவு நீரினால் நீர் வசதியற்ற கஷ்டப் பிரதேச விவசாயிகளும் இம்முறை மூலம் விவசாய நடவடிக்கையில் ஈடுபடலாம்.

உலர் வலயத்தில் அமைந்துள்ள முன்மாதிரியான விவசாயப் பண்ணைகள் மூன்றில் இரண்டு பண்ணைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய விஞ்ஞான பீடத்தின் மேற்பார்வையின் கீழ் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் அமைந்துள்ளன. மற்றையது மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ளது. முதற்கட்டமாக ஒரு மாவட்டத்தில் 100 விவசாயிகள் வீதம் 300 விவசாயிகளுக்கும் மாவட்டத்துக்கு 30 விவசாய திட்ட அதிகாரிகள் வீதம் 90 பேருக்கும் மாவட்டத்துக்கு 3 பேர் வீதம் விவசாய உபகரண விற்பனையாளர்கள் 9 பேருக்கும் விவசாய தொழில் நுட்பப் பயிற்சி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்தொழில் நுட்பத்தின் மூலம் மரக்கறி, தென்னை, வாழை போன்ற வர்த்தக பயிர்களை பயிரிட்டு இரண்டு, மூன்று மடங்கு இலாபத்தைப் பெறமுடியும். மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் தூர்ந்து போன பழைய குளங்களை மீண்டும் புனரமைத்து விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான நீரைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

காலத்துக்குக்கு காலம் வாடைக் காற்று, கச்சான் காற்று காரணமாக கிணற்று நீரில் உப்பு நீர் கலக்கின்றது. இதனால் அப்பிரதேச மக்கள் குடிநீர் பிரச்சினைக்கு முகங் கொடுக்கின்றார்கள். இதற்கு தீர்வாக தாது உப்பு தடைகளை போட நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க மழை நீர்த் தாங்கிகளை வழங்க அக் காரியாலய தலைவி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

அனைத்துக் குடிமக்களும் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் ரீதியாக மதிக்கப்படுகின்ற அனைத்து இலங்கையர்களும் சகவாழ்வுடனும், ஒற்றுமையுடனும் உறுதியான பலத்துடன் வாழ தேவையான சூழலை உருவாக்குவதே பிரதான நோக்கமாகும் எனத் தெரிய வருகிறது. (இ)



## புதிய தேர்தல்முறை குறித்து தெளிவுபடுத்த சு.க.முடிவு

(கொழும்பு)

புதிய தேர்தல் முறை குறித்து மாவட்ட மட்டத்தில் அரசியல் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களுக்கு தெளிவுபடுத்த உள்ளதாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணி தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காக கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப் படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கைச்சின்னம் அல்லது வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் சாந்த பண்டார மேலும் தெரிவித்தார். (இ-7)

## இயற்கை எரிவாயு கிடங்கில் வெடி விபத்து; 6 பேர் பலி!

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கானா தலைநகர் அக்ராவில் உள்ள இயற்கை எரிவாயு கிடங்கில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கிய ஆறு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேற்கு ஆபிரிக்க கண்டத்தில் கினியா வளைகுடா பகுதியில் உள்ள சிறிய நாடுகளில் ஒன்றான கானாவில் ஏராளமான பெற்றோலிய கிணறுகளும் இயற்கைஎரிவாயுக் கிடங்குகளும் இயங்கி வருகின்றன.

அவ்வகையில், அந்நாட்டின் தலைநகரான அக்ரா நகரின் மையப் பகுதியில் அரசுக்கு சொந்தமான இயற்கை எரிவாயு கிடங்கில் நேற்று முன்தினம் பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த எரிவாயு, பயங்கர சப்தத்துடன் மிகப் பெரிய தீப்பிழம்பாக மாறி வானத்தை நோக்கி சென்றதை கண்ட அப்பகுதி மக்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர்.

இந்த விபத்தில் 6 பேர் உயிரிழந்ததாகவும் 35 பேர் காயமடைந்ததாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த 2015ஆம் ஆண்டில் இதேபோல் ஏற்பட்ட ஒரு வெடி விபத்தில் சுமார் 100 பேர் உயிரிழந்த நிலையில், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறைவான நிலையில் இதைப்போன்ற எரிவாயு கிடங்குகள் இயங்கி வருவதற்கு அக்ரா நகர மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகளின் உடல்நிலை மோசமடைந்திருக்கும் நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் மௌனம்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.குற்றச்சாட்டு

உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளின் உடல் நிலை மோசமடைந்திருக்கும் நிலையில் எதிர்கட்சி தலைவர் கைதிகளின் நிலைமை குறித்து பாராமுகமாக இருப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த வன்னி பாராளுமன்ற உறுப்பினர்சிவசக்தி ஆனந்தன்,

தமிழ் அரசியல் கைதிகள் தங்களுடைய வழக்கை வவுனியா நீதிமன்றத்திலேயே விசாரிக்க வேண்டும். அநுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றக் கூடாது மற்றும் பொது மன்னிப்பளித்து விடுதலை செய்ய வேண்டும் என தெரிவித்து அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த பன்னிரண்டு நாட்க ளாக சாகும்வரை உண்ணா விரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ள நிலையில் கைதிகளில் இருவரின் உடல் நிலை மோசமடைந்து அநுராதபுரம் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். கைதிகளின் சிறுநீரகங்கள் செயலிழக்கும் நிலையை அடைந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்திருக்கும் நிலையில் குறிப்பிட்ட கைதிகள் நீர் அருந்த மறுத்து உண்ணாவிரத த்தை தொடர்ந்து வருகின்ற னர்.

உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை குறித்து ஜனாதிபதியுடன் இரண்டு தடவைகள் பேசியுள்ளேன். சட்டத்திற்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த காலத்தில் தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தை வாக்குறுதி வழங்கி தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் முடிவுக்கு கொண்டு வந்திருந்தார். அவர் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக எந்த சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படவில்லை எனச் சுட்டிக்காட்டினார். அத்துடன் தொடர் உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளின் உடல் உறுப்புக்கள் செயலிழக்கும் நிலையை அடைந்துள்ள நிலையில் கூட எதிர்க்கட்சி தலைவர் மௌனம் சாதிப்பது வேதனையளிக்கிறது எனக்குறிப்பிட்டார்.



அரசியல் கைதிகளின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக இன்று திங்கட்கிழமை வவுனியா மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்னால் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை தொடர்ச்சியான மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். (2-250)




## நீதிமன்ற அபராதங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சியில் ஒலியெழுப்ப தடைவிதிக்கப்பட்ட பகுதியான நீதிமன்றின் முன்னால் ஒலியெழுப்பியவருக்கு மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி ஏ-9 வீதியில் ஒலியெழுப்புவதற்கு தடை விதிக்கப்பட்ட பகுதியான கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் முன்னால் ஒலியெழுப்பிய ஒருவரை கைது செய்து இவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

(கண்டாவளை)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் பயணிக்கும் போது தவறான முறையில் முந்திச்சென்றவருக்கு ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் பயணிக்கும் போது தவறான பக்கமாக முந்திச்சென்ற ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்து குறித்த சாரதியை கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (2-31·5)

# தேசிய உணவு உற்பத்தி வாரத்தையொட்டி பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கல்



தேசிய உணவு உற்பத்தி வாரம் மற்றும் உலக குடியிருப்போர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருதொகுதி பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

மல்லாவி வடகாடு மாதிரி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் விஜித கமகே தலை மையில் நேற்று முன்தினம் நடை பெற்றுள்ளது.

இதில்வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் களான வைத்திய கலாநிதி சி.சிவமோகன், சாந்தி சிறீஸ்கந்தராசா ஆகியோர் கலந்து கொண்டு பயன் தருமரக்க ன்றுகளை பயனாளிகளுக்கு வழங்கியுள்ளதுடன் குடியிருப்பில் மரக்கன்றுகளை நாட்டிவைத்து சிறப்புரை நிகழ்த்தியுள்ளார்கள்.

இந்த நிகழ்வில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட சமுர்த்தி ஆணையாளர், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர், மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச திட்டமிடல் பணிப்பாளர்கள், வீடமைப்பு திட்ட அதிகாரிகள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டுள்ளார்கள். (2-250)

# கொட்டனால் தலையில் தாக்கப்பட்ட வர்த்தகர் வைத்தியசாலையில் அனுமதி

மல்லாவி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவருக்கும் அருகே குடியிருக்கும் குடும்பம் ஒன்றிற்கும் இடையே நிலவி வந்த நீண்டகால பகை காரணமாக எழுந்த வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப்பாக மாறிய போது வர்த்தகர் தலையிலும், முதுகுப் புறத்திலும் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 11.50 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நீண்ட காலமாக குடிநீர் கிணற்றுப் பங்குப் பிரச்சினை தொடர்பில் இரண்டு தரப்புக்கும் இடையே அடிக்கடி வாய்த்தர்க்கம் நடைபெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் கைகலப்பாக மாறிய போது மற்றைய தரப்பைச் சேர்ந்த 4 பேர் சேர்ந்து தாக்குதலை மேற்கொண்டதுடன் கொட்டனால் தலையில் தாக்கியுள்ளனர்.

இதனால் படுகாயமடைந்த வர்த்தகரை அயலவர்கள் மீட்டு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். கந்தசாமி - புவனேஸ்வரன் (வயது - 41) குடும்பஸ்தரான வர்த்தகரே படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற மல்லாவி பொலஸார் தாக்குதலை மேற்கொண்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 பேரைக் கைது செய்துள்ளதுடன் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ள மற்றைய நபரைக்கைது செய்வதற் கான நடவடிக்கைகளைமேற்கொண்ட நிலையில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# 1,763 விவசாயிகளுக்கு விவசாயத்தை ஊக்குவிப்பதற்கு உதவிப்பொருட்கள்

(மல்லாவி )

வடக்கு மாகாண சபையின் நடப்பாண்டுக்குரிய குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன் கொடை நிதி 26.6 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் உள்ள 6 இளைஞர் விவசாயக் கழகங்கள் மற்றும் 2, பெண்கள் விவசாய அமைப்புக்களிற் ட்பட்ட ஆயிரத்து 763 விவசாயிகளிற்கு விதை தானியங்கள், நல்லின பழ மரக் கன்றுகள், விவசாய உபகரணத் தொகுதிகள், உட்பட பல்வேறு விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொன்னையா அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டானில் உள்ள முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சர் கந்தையா சிவனேசன் கலந்து கொண்டு விவசாயிகளிற்கான உதவிப் பொருட்களை வழங்கி வைத்துள்ளார்.

இதன்போது, பல்வேறு திட்டங்கள் ஊடாக 404, விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உபதானியப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் 60, விவசாயிகளுக்கு நிலக்கடலையும், நிலக்கடலை பயிர்களை ஊடறுத்து தரை பண்படுத்தும் கருவிகள் 10, 10 விவசாயிகளுக்கும், களைகளைக் கட்டுப்படுத்தும் 05 கருவிகள், ஐந்து விவசாயிகளுக்கு 50, வீத மானிய அடிப்படையில் வழங்கிவைக்கப்பட்டுள்ளது. பழமரச் செய்கையினை ஊக்குவிக் கும் வகையில் 36 விவசாயி களுக்கு நல்லின பழ மரக்கன்றுகளும், பழக் கூடைகளும் வழங்கப்பட்டன.

மாமரச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் 25 விவசாயிகளுக்கு நல் லின மாங்கன்றுகளும் 55 விவசாயிகளுக்கு தூவல் பாசனக் கருவிகளின் தொகுதியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தேனீ வளர்ப்பு விவசாயிகள் 30 பேருக்கு அதற்கான உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாய வன வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 08 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் 1000 விவசாயிகளுக்கு மாதுளை, கொய்யா, நெல்லி, முருங்கை, ஒட்டுப் பலா, ஜம்பு, தென்னை ஆகிய மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

அன்னாசி பழப்பயிர் செய்கையாளர்களுக்கு ஆயிரத்து 500 உறிஞ்சிகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# சடலத்தை அடையாளம் காண பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோருகின்றனர்

(மல்லாவி )

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்தில் மோதுண்டு உயிரிழந்துள்ள இளைஞர் ஒருவரின் சடலத்தை அடையாளம் காண பொது மக்களை உதவுமாறு மன்னார் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

குறித்த விபத்துச் சம்பவம் கடந்த 4, ஆம் திகதி புதன்கிழமை இரவு 10.15 மணியளவில் மன்னார் தாராபுரம் காங்கியடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அண்மையாக செல்லும் புகையிரதப் பாதையில் 312 ஆவது மைல்கல் பகுதியில் நடைபெற்றுள் ளது.

புகையிரதத்தில் மோதுண்டு உயிரிழந்த இளைஞனின் சடலம் தற்போது மன்னார் பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் பிரேத பரிசோதனைக்காகவும் சடலத்தை இனம் காண்பதற்காகவும் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்துள்ள இளைஞர் சுமார் 25 வயது மதிக்கத்தக்கவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்தவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கோ, அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களிலோ அல்லது அவசர தொலைபேசி இலக்கமான 119 ஊடாகவோ தகவல் களை வழங்கி உதவுமாறு பொலிஸார் இது தொடர்பில்மேலும் தெரிவித்துள்ளனர். (2-15)

## தரம்5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

கிளி/பள்ளிகுடா வித்தியாலயம்

து.இசைவாணி-174

கிளி/செம்பன் குன்று அ.த.க.பாடசாலை

இ.கவியழகள்-173, சி.தனுஷன்-166, சி.தமிழ் நிலா-160

கிளி/முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம்

அ.எழிலன்-173, ம.திருவழகன்-165, ஆ.ஆதித்ய நிலா-162, க.சங்கவி-160, உ.செயல் விழி-160, வி.கோபிகா-157, ம.தாருசா-157, க.பிருந்தன்-157

கிளி/ பூநகரி மத்திய கல்லூரி

சி.வைகறை-166, ர.துவாரகன்-161, வெ.கனி நிலா-161, கி.கோகிலன்-159

கிளி/ பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்

ஜெ.ஜெயிதலா-157, அ.அன்பு -155

கிளி/ஜெயபுரம் ம.வி.

க.கதிர்நிலவன்-155

கிளி/குமுழமுனை அ.த.க. பாடசாலை

து.துவாரகன்-154.

கிளி/சோரன் பற்று சி.சி.த.க. பாடசாலை

சி.சார்மிலன்- 172, அ.கோபிசன்-163. (2-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட அறநெறி பாடசாலைகளின் இணையத்துடன் மன்னார் நகரசபை மண்டபத்தில் இந்து மாநாடு இரு அமர்வுகளாக சிறப்பாக நடைபெற்றது. மன்னார் நகரம் முழுவதும் நந்திக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட நிலையில் காலை 9 மணிக்கு மன்னார் நுழைவாயிலில் உள்ள பாலத்தடியில் ஆரம்பமான ஊர்வலம் பெரும்திரளான மக்களுடன் மன்னார் நகரசபை மண்டபத்தை வந்தடைந்தது. ஊர்வலத்தில் நடராஜர் சிலை கொண்டு வரப்பட்டதுடன், நந்திக் கொடிகளையும் ஏந்தியவாறு மக்கள் சென்றனர்.

(படங்கள்- குருமன்காடு செய்தியாளர்)

## குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு;

# ஊர் சுற்றுக்காவல் கடமையில் பொலிஸாரும் இளைஞர்களும்

## புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரிவில் அண்மைய நாட்களாக அதிகரித்துச் செல்லும் கொள்ளை, களவு, ஆகிய குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும். வகையிலும் சமூக சீரழிவுகளை ஏற்படுத்தும் கஞ்சா சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மற்றும் பாவனைகளைக் கட்டுப்படுத்தவும்

கலாசார விழுமியங்களை மீறுபவர்களை கண்காணிக்கும் முகமாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர்கள் அணிதிர ண்டு ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் இரவு நேரங் களில் புதுக்குடியிருப்பு பொலிஸாருடன் இணைந்து ஊர் சுற்றுக் காவல் கடமைகளில் ஈடுபட்டு வருவதாக புதுக் குடியிருப்பு பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கிராமங்களில் அண்மைய நாட்களாக மர்மக் கும்பல் ஒன்றைச் சேர்ந்தவர்கள் முகத்தை மூடிக் கட்டியவாறு கத்தி, அரிவாள், கொட்டான்கள் என்பனவற்றுடன் வீடுகளுக்குள் புகுந்து வீட்டில் உள்ளவர்களை அச்சுறுத்தி கொள்ளை இட்டு வந்துள்ளனர்.

அத்துடன், பல வீடுகளில் கொள்ளையிட முற்பட்ட போதும் மக்கள் விழிப்படைந்து சத்தமிட்டதை அடுத்து அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனால் மக்கள் அச்சம் .அடைந்த நிலை ஏற்பட்டதை அடுத்து, விழிப்படைந்த கிராம மட்ட இளைஞர்கள், கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆகியோர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடியதை அடுத்து அவரது பூரண ஒத்துழைப்புடன் புதுக்குடியிருப்பு பொலிஸார் 20, பேரும் கிராம இளைஞர்களும் இணைந்து 4, பிரிவுகளாக தினசரி கோம்பாவில். சிவநகர், இரணைப் பாலை, ஆனந்தபுரம் ஆகிய நான்கு இடங்களிலும் உள்ள பிரதான சந்திகளில் காவல் கடமையில் இரவு நேரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் பயனாக, கடந்த 03 ஆம் திகதி செவ்வாய் கிழமை இரவு சிவநகர் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த 5, பேரைத் தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது அவர்கள் கிளிநொச்சி மாவட் டத்தில் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர் புடையவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

இவர்களைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்திய போது தொடராகப் பல குற்றச் செயல்களில் இவர்கள் ஈடுபட்டு வந்தமை தெரிய வந்துள்ளது.

இவர்களை முல்லைத் தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தின் மறு நாள் புதன்கிழமை சிவநகர் பகுதியில் காவல் கடமையில் இருந்து பொலிஸாரும், இளைஞர்களும் சந்தேகத்திற் கிடமான வகையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 2, பேரை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட் போது கேரளாக் கஞ்சாவை தமது உடைமையில் கொண்டு சென்றமை கண்டு பிடிக்கப்பட்டது என அவர் தெரிவித்தார். (2-15)




# ஆறுமுகம் வீதியில் பற்றைகள் சூழ்ந்துள்ள காணியை கவனியுங்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் மக்கள் கோருகின்றனர்



கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியிலுள்ள ஆறுமுகம் வீதியில் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான பராமரிப்பின்றியுள்ள காணியும் கட்டடமும் பற்றைகளால் சூழ்ந்து காணப்படுகின்றது.

இதனால் குறித்த இடத்தில் சமூக சீர்கேடுகள் நடைபெற்று வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

குறிப்பாக மதுபாவனை, கஞ்சா, கசிப்பு ஆகியவற்றை இவ்விடத்தில் வைத்து விற்பனை செய்வதுடன் சமூக சீர்கேடான சில விடயங்களும் நடந்தேறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் இவ் விடத்தை துப்புரவு செய்யுமாறு கோரி கிராம மட்ட அமைப்புக்கள் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து துப்புரவு பணியை உடன் ஆரம்பிக்குமாறு கோருகின்றனர். (2-277)

# பாவற்குளம் விதை உற்பத்தி நிலையத்தினூடாக தூய விதை நெல் விற்பனை சேவை

(வவுனியா)

வவுனியாமாவட்டத்தில் கடந்த இரு போகங்களிலும் ஏற்பட்டுள்ள வரட்சி நிலைமை காரணமாக தற்போதுவிதைநெல்லை பெற்றுக்கொள்வதில் விவசாயிகள் பெரும் சிரமங்களைஎதிர் கொள்கின்றனர்.

எனவே, மாகாண விவசாயத் திணைக்களமானது கடந்த காலபோகத்தில் விவசாயிகளுக்காக விவசாயிகளே தூயவிதை நெல்லை உற்பத்தி செய்து அதனை பாவற்குளம் விதை உற்பத்தி நிலையத்தினூடாக விற்பனைசெய்யும் திட்டத்தினை உருவாக்கியது.

இதற்கமைவாக நெல்லினங்கள் பாவற்குளம் விதை உற்பத்தி நிலையத்தினூடாகவிவசாயிகள் பெற்றுக்கொள்ளமுடியும்.

At 308 - 920 புசல் (சிபார்சுசெய்யப்பட்டது) (ரூபா 1700.00), Bg 360 - 900 புசல் (சிபார்சுசெய்யப்பட்டது) (ரூபா 1700.00), Bw 367 - 200 புசல் (சிபார்சு செய்யப்பட்டது) (ரூபா 1700.00) ஆகும்.

மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள கீழ்வரும் தொலைபேசிதொடர்புகளை மேற்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் தெரிவித்தார்.

தலைவர், பாவற்குளம் விதைஉற்பத்திநிலையம் - 0773383962 பொருளாளர், பாவற்குளம் விதை உற்பத்திநிலையம 077 458 7883. (2)



சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் உளநல மருத்துவப் பிரிவினால் நேற்றுக் காலை 9.30 மணியளவில் வைத்தயசாலை வளாகத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் நடை பெற்ற போது....

(படங்கள்- கிளிநொச்சி -01 செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தங்களால் 9 மாதங்களில் 26 இலட்சம் பேர் இடப்பெயர்வு

இலங்கையில் கடந்த ஒன்பது மாதங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் 26 இலட்சம் பேர் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். வடக்கு-கிழக்கு, வடமத்திய, தென்மேற்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் வரட்சியினால் 19 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளதாக சுற்றாடல் நீதித்துறை நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹேமந்த விதானகே தெரிவித்தார்.

கொழும்பு, களுத்துறை, மாத்தறை, இரத்தினபுரி, காலி ஆகிய மாவட்டங்களில் சுமார் ஏழு இலட்சம் பேர் பாரிய மண்சரிவு, வெள்ளப்பெருக்குகளினால் இடம்பெயர்ந்து வாழ்வதாகவும் அவர்களில் சுமார் 300பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களினால் 2 ஆயிரத்து 500 வீடுகள் முற்றாக அழிவடைந்துள்ளன எனவும் 15ஆயிரம் வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் ஹேமந்த விதானகே கூறினார்.

அதேவேளை வரட்சியினால் இடம்பெயர்ந்த 19 இலட்சம் பேரில் மூன்று இலட்சம்பேர் பாரிய உணவு கிடைக்காமல் அவதிப்பட்டதாகவும் குறிப்பாக வடக்கு-கிழக்கில் கூடுதலான மக்கள் உணவின்றி அவதிப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அரசை நம்பிக்கொண்டிருக்காது சொந்த கூட்டு முயற்சியூடாக நாம் முன்னேற வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் அறிவுரை



அனைத்துக்கும் அரசாங்கத்தினை நம்பிக்கொண்டிருக்காமல் தமிழ்மொழி, இந்து மதம், கலை, கலாசாரத்தினைப் பொறுத்த வரையில் எங்களது சொந்த கூட்டு முயற்சி ஊடாக முன்னேற்றமடையச்செய்து பாதுகாத்துக்கொள்வதற்கு அனைவரும் இயன்ற பணியை மேற்கொள்ளவேண்டும் என எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அன்றைய காலகட்டத்தில் வறுமை நிலையில் உள்ள முஸ்லிம் மக்களுக்கும் தன்னால் முடிந்த உதவிகளை சுவாமி விபுலானந்தர் செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சுவாமி விபுலானந்தரின் 125 ஆவது ஆண்டு ஜனன தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் கடந்த மூன்று தினங்களாக நடத்தப்பட்டு வந்த சுவாமி விபுலானந்தர் மாநாட்டின் இறுதி நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இங்கு உரையாற்றும் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரி வித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து மக்களும் அனைத்து மொழிகளிலும் வெளிவரும் விடயங்களை அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக இவ்வாறான மொழிபெயர்ப்பு பணிகளையும் மேற்கொண்டார்.

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளிலும் இராம கிருஷ்ண மிசனின் செயற்பாடுகளை பரப்பியவர் விபுலானந்தரே. பல பாடசாலைகளையும் ஆரம்பித்தார்.

வறுமைநிலையில் இருந்த இளைஞர்கள் தொடர்பில் அதிகளவில் சுவாமி விபுலானந்தர் அக்கறை செலுத்தினார். அனைத்து மக்களுக்கும் முடிந்தளவு சேவையாற்றவேண்டும் என்ற கொள்கையுடன் செயற்பட்டு வந்தார்.

இலங்கை சிவில் சேவையில் இருந்த கல்விமான் அசீஸ் உடன் இணைந்து வறிய முஸ்லிம் மக்களுக்கும் தன்னால் இயன்ற பணியை செய்வதற்கு பின்னிற்கவில்லை. முஸ்லிம் மக்களுக்கு பல உதவிகளை இருவரும் செய்தார்கள்.

சுவாமி விபுலானந்தர் தனது முழு வாழ்வினையும் மக்களது சேவைக்காக மனித சமுதாயத்தின் சேவைக்காக அர்ப்பணித்தார். இராம கிருஸ்ணர், விவேகானந்தரை இந்தியாவில் உள்ள மக்கள் எவ்வாறு மதித்தார்களோ அவ்வாறு விபுலானந்தரை இலங்கையில் வாழும் மக்கள் மதித்தார்கள். அவரை கௌரவிக்கும் வகையில் இலங்கையில் முத்திரையொன்று வெளி யிடப்பட்டது.

அதேபோன்று ஜேர்மனியிலும் ஒரு முத்திரை வெளியிடப்பட்டது. சுவாமி விபுலானந்தர் மூலம் கிடைத்த படிப்பனைகள் செயற் பாடுகள் மறக்கப்படக்கூடாது. அவை அழியக்கூடாது. இவ்வாறான நிகழ்வுகள் ஊடாக அது தொடர்பான அறிவினை மக்களுக்கு வழங்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழகத்தில் டெங்குக் காய்ச்சலை கட்டுப்படுத்த அதிகளவான வைத்தியர்கள், தாதியர்கள் நியமனம்

## முதலமைச்சர் பழனிச்சாமி தெரிவிப்பு



(தர்மபுரி)

அரசு வைத்தியசாலைகளில் டெங்கு காய்ச்சலுக்கு உடனடியாக சிகிச்சை அளிப்பதற்காக 2 ஆயிரம் தாதியர்கள் மற்றும் 744 வைத்தியர்கள் நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தர்மபுரியில் நடந்த எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் முதலமைச்சர் பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தெரிவித்தாவது,

தமிழ்நாடு முழுவதும் பல மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. இதனால் வைத்தியசாலைகளில் கூட்டம் நிரம்பி வழிகிறது. தமிழக அரசின் சுகாதாரத்துறை போர்க்கால அடிப்படையில் டெங்கு தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

இன்றைக்கு இந்த அரசு டெங்கு ஒழிப்புக்கு கருவிகள் வாங்குவதற்காக ரூ.23.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஒதுக்கப்பட்ட நிதியின் மூலமாக 837 கருவிகள் வாங்கப்பட்டு அரச வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் ஜெயலலிதாவின் அரசு ஏற்படுத்தப்பட்ட பிறகு, 1,113 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். மேலும் பல சிறப்பு வைத்தியர்களை நியமிக்கவுள்ளோம். இப்படிப்பட்ட வைத்தியர்கள், தாதியர்கள் நியமிக்கப்பட்ட காரணத்தினாலே, இன்றைக்கு டெங்கு காய்ச்சலால் அல்லது வைரஸ் காய்ச்சலால் யார் பாதிக்கப்பட்டாலும், உடனடியாக சிகிச்சை செய்யக்கூடிய அளவிற்கு அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால், இன்றைக்கு வேண்டுமென்றே திட்டமிட்டு, இந்த டெங்கு காய்ச்சலை தவறாக பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, அரசைப் பொறுத்தவரைக்கும், இந்தக் காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு உங்களின் சேவகனாக தொடர்ந்து பணியாற்றும்எனத்தெரிவித்தார். (8)

# ஐம்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹெரோயினுடன் உகண்டா பெண் கைது

50 இலட்சம் ரூபாய் பெறுமதியானஹெரோயின்போதைப் பொருளை எடுத்துவந்த பெண் ஒருவர் கட்டுநாயக்க சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். டுபாயில் இருந்து விமானத்தின் மூலம் இலங்கைக்கு வந்த 43 வயதுடைய உகண்டா நாட்டு பிரஜையே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

505 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை தனது பயணப்பையில் மறைத்து வைத்துக்கொண்டு வரும் போதே நேற்று அதிகாலை 5.20 மணியளவில் விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட குறித்த பெண், மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் பொதைப்பொருள் ஒழிப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சுங்க ஊடக பேச்சாளர் தர்மசேன கஹந்தவ தெரிவித்தார். (இ-7)

# தீபாவளி முற்பணமாக 10,000 ரூபாய் தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கை

(கொழும்பு)

இம்முறை தீபாவளிப் பண்டிகை முற்பணமாக 10,000 ரூபா பெற்றுத் தரும்படி அக்கரப்பத்தனை பிரதேச தோட்டத் தொழிலாளர்கள் கேரி வருகின்றர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளிப் பண்டிகை முற்பணமாக 6,500 ரூபா பெற்றுக்கொடுக்கவே தோட்ட நிர்வாகங்கள் தீர்மானித்துள்ளதாக ஏற்கனவே செய்திகள்வெளிவந்துள்ளன.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒவ்வோராண்டும் வழங்கப்பட்டு வரும் தீபாவளி முற்பணம் வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டு 10 மாதாந்த தவணைகளில் மீள அறவிடப்பட்டுவருகின்றது.

எனினும், இன்று விலைவாசிகள் மிக அதிகமாகி விட்ட நிலையில், தோட்டத் தொழிலாளர்கள் சிறப்பாகக் கொண்டாடி வரும் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவதற்கு 6,500 ரூபா எவ்வகையிலும் போதாது எனத் தெரிவித்துள்ள தோட்டத் தொழிலாளர்கள், இம்முறைபண்டிகைமுற்பணமாக ரூபா10ஆயிரம்பெற்றுக்கொடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி தொழிற்சங்கத் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

# யாழ்.வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து கலந்துரையாடல்

யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தின் வர்த்தக பெருமக்கள் அண்மைக் காலமாக எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பான கலந்துரையாடல் நாளை 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறும். (இ-7)



செம்மனச் செல்வியின் பூமரங், மகரகாவியம், ரோசாப்பூ ஆகிய மூன்று சிறுகதைத் தொகுதிகளின் வெளியீட்டு நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராசாவின் வாழ்க்கை நயப்புப்பனுவல் “ கருமத்திருதி ” நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் தேசியு கல்வியியற் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

# தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கையை அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்

## இன்று யாழில் இடம்பெறும் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்து லெனினிசக்கட்சி அறிக்கை

அநுராதபுரம் சிறைச்சாலையில் மூன்று தமிழ் அரசியல் கைதிகள் தங்கள் மீதான வழக்கு விசாரணையை அநுராதபுரத்தில் இருந்து வவுனியா நீதிமன்றத்திற்கு மாற்ற வலியுறுத்தி தொடர்ந்து 15 நாட்கள் உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை உடன் நிறைவேற்றுமாறு புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் வட பிராந்தியச் செயலாளர் செல்வம் கதிர்காமநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கொடூர யுத்தம் நடந்து முடிந்து எட்டு ஆண்டுகளைக் கடந்துள்ள போதும் தேசிய இனப்பிரச்சினைக்கு இன்றுவரை ஒரு தீர்வை ஏற்படுத்துவதற்கு முடியாமல் தத்தளிக்கும் அரசு இத்தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வின்மையால் எழுந்த போராட்டத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர்களின் விடுதலை பற்றி அக்கறை இல்லாமல் இருப்பது நல்லாட்சி அரசாங்கத்தின் போலித்தனத்தை அம்பலப்படுத்தி நிற்கின்றது.

மகிந்த ராஜபக்ஷவின் ஜனநாயக விரோதப் போக்குகளுக்கு எதிராகவே நல்லாட்சி அரசுக்கு மக்கள் வாக்களித்தார்கள். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஏனைய மக்களின் பிரச்சினைகளைப் போல் அரசியல் கைதிகளை அடைத்துத் துன்புறுத்தி எதுவித நீதி விசாரணையுமின்றி வைத்திருக்கும் நிலை தொடர்கின்றது.

எனவே உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அரசியல் கைதிகளின் நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் அனைத்து அரசியல் கைதிகளும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தி பொது அமைப்புகள் இணைந்து இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். பேருந்து நிலையம் முன்பாக நடைபெறும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. (இ-8)

## மகிந்த வாங்கிய கடன்களை செலுத்த மாற்று வேலைத்திட்டம்

### அமைச்சர் சாகல கூறுகிறார்



இலங்கையின் எந்தவொரு வளத்தையும் வெளிநாடுகளுக்கு விற்கப்போவதில்லை. முன்னைய அரசாங்கம் வாங்கிய கடன்களை செலுத்தவே மாற்று வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதாக அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

மக்களை தூண்டிவிட்டு குழப்பங்களை ஏற்படுத்தும் நபர்களை சிறையில் அடைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2017இல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற




### செல்வன் இ.துவாரகன்

(176 புள்ளிகள்)

யாழ். புனித சென்ஜோண் பொஸ்கோ வித்தியாலய மாணவனும் யாழ். செட்டித்தெரு இல 58/9, நல்லூர் வாழ் திரு. திருமதி இரவிபாலன்- திரிபுரசுந்தரியின் ஏக புதல்வன் செல்வன் துவாரகன் நயினை நாகபூஷணி அம்பாளின் அனுக்கிரகத்தாலும் நல்லூர் கந்தனின் கருணையினாலும் 176 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தமையைப் பாராட்டி மேலும் கல்வியில் உயர்வு பெற வேண்டி இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மா, தாத்தா ஆ.[illegible]
ஆசையம்மம்மா, அவுஸ்திரேலியா அம்ம[illegible]
அண்ணன்மார்கள், மாமாமார்கள், மாமிமார்கள், மைத்துனர்மார்கள், மைத்துனிமார்கள்

(பி-0934)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: செவ் 2 இல்
தகைமை/தொழில்:O/L/அரச தொழீல்
தொ.இ: B/7844

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 62 செவ் 7 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:O/L/சாரதி டுபாய்
தொ.இ: B/7845

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 30 செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/சாரதி
தொ.இ: B/7846

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 45
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:பட்டதாரி/ பொறியியலாளர்
தொ.இ: B/7848

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா.சூரிசெவ் 1 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்:BA/அரச தொழில்
தொ.இ: G/7879

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 36
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: G/7886

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 75செவ் 7 இல்
உயரம்: 4'8"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7887

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா. செவ் 2 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:BA
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7889

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# இன்னும் 2 நாட்களில் இரட்டை இலைச்சின்னம் நம்மை வந்து சேரும்

## ஓ.பன்னீர்செல்வம் நம்பிக்கை



(தர்மபுரி)

இன்னும் 2 நாட்களில் இரட்டை இலைச் சின்னம் நம்மை வந்து சேரும் என்று தர்மபுரியில் நடந்த எம்.ஜி. ஆர். நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, மக்களுக்கு நன்மை செய்பவர்களை இறைவனே படைக்கிறார். அவ்வாறு இறைவனால் படைக்கப்பட்டு தமிழகத்திற்கு வழங்கப்பட்டவர்கள் எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் ஆவர். மக்களுக்கான சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கி அர்ப்பணிப்பு உணர்வுடன் மக்கள் சேவையை எம்.ஜி.ஆர். செய்தார். அவர் வழியிலேயே ஜெயலலிதாவும் மக்கள் நலனுக்கான ஆட்சியை வழங்கினார்.

குரு எந்த வழியோ? அதே வழியில் சிஷ்யர்கள் இருப்பார்கள். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவின் விசுவாச தொண்டர்களான நாம் அவர்கள் காட்டிய வழியிலேயே செயற்பட்டு வருகிறோம்:

தமிழகத்தின் அனைத்து மக்களும் மகிழும் வகையில் உருவான எம்.ஜி.ஆர். ஆட்சியை தானும் தங்கள் பிள்ளைகளும் மட்டுமே வாழ வேண்டும் என்று நினைத்த சிலர் முடக்கப் பார்த்தனர்.

ஆனால்அந்த தடைகளையெல்லாம் தாண்டி ஏழைகள் ஏற்றம் பெற வேண்டும், சாமானியர்கள்சகலமும்பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் எம்.ஜி.ஆர். ஆட்சியை நடத்தினார்.

ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம் என்ற அண்ணாவின் தாரக மந்திரத்தை நிறைவேற்றும் வகையில் எம்.ஜி.ஆர் உருவாக்கிய சத்துணவு திட்டம், பசியில்லாத தமிழ்நாட்டை உருவாக்க வழிவகை செய்தது.

எம்.ஜி.ஆர். வழியிலேயே மக்களுக்கு நல்லாட்சியை ஜெயலலிதா வழங்கினார். மீன்குஞ்சுகளுக்கு நீந்த கற்றுக்கொடுக்க வேண்டுமா? எனக்கு பின்னாலும் அ.தி.மு.க. என்ற மாபெரும் இயக்கம் 100 ஆண்டுகளுக்கு மேலும் ஆட்சியில் இருக்கும் என்று ஜெயலலிதா கூறினார்.

இரட்டைஇலை சின்னம் இன்னும் 2 நாட்களில் நம்மை வந்து சேரும். எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஆகியோரின் ஆன்மா இரட்டை இலை சின்னத்தை நமக்கு பெற்றுத் தரும். சொந்தக்கட்சிக்கே தலைவராக வர முடியாதவர் தமிழக முதலமைச்சராக வேண்டும் என்று நினைக்கிறார்.

தமிழக மக்கள் அதற்கு எப்போதும் துணை போக மாட்டார்கள். தமிழக மக்கள் நமது பக்கம் உள்ளனர். நம்மை வீழ்த்த நினைப்பவர்கள் வீழ்வார்கள். நமது விசுவாச தொண்டர்களே வாழ்வார்கள் என்றார். (8)

# நடராஜனை சந்தித்து நலம் விசாரித்தார் சசிகலா



பெங்களூரில் சிறையில் இருந்து பரோலில் வெளியே வந்துள்ள சசிகலா, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தன் கணவர் நடராஜனை நேற்று முன்தினம் சந்தித்து நலம் விசாரித்துள்ளார்இ

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைத்தண்டனை பெற்ற சசிகலா, 7 மாத சிறைவாசத்துக்குப் பிறகு கடந்த வெள்ளிக்கிழமை மாலை பரோலில் வெளியே வந்தார். உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்ட தன் கணவர் நடராஜனை அருகில் இருந்து கவனிப்பதற்காக சசிகலா 15 நாட்கள் பரோல் கேட்டிருந்தார். ஆனால், 5 நாட்கள் மட்டுமே அவருக்கு பரோல் வழங்கப்பட்டுள்ளது. அரசியல் நிகழ்வுகளில் பங்கேற்கக்கூடாது, ஊடகங்களுக்கு பேட்டி கொடுக்கக் கூடாது, வெளியில் எங்கும் செல்லக்கூடாது போன்ற பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

பரோல் கிடைத்ததும் இரவு சென்னைக்கு வந்த சசிகலா, தி.நகரில் உள்ள இளவரசியின் மகள் வீட்டில் தங்கினார். நேற்று முன்தினம் காலை அங்கிருந்து, தன் கணவர் நடராஜன் சிகிச்சை பெற்று வரும் பெரும்பாக்கம் குளோபல் வைத்தியசாலைக்கு புறப்பட்டார். நண்பகல் மணியளவில் அங்கு சென்ற அவர் நடராஜனை சந்தித்து நலம் விசாரித்தார். மேலும் அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து வைத்தியர்களிடம் விசாரித்தார்.

நடராஜனுக்கு கல்லீரல், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதையடுத்து, தொடர்ந்து தீவிர மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார். செயற்கை சுவாசம் அளிக்கப்படுகிறது. (8)

# எரிவாயு திட்டத்தை ஏற்க முடியாது

## வைகோ அறிவிப்பு



(சென்னை)

விவசாயிகளை பாதிக்கும் கெயில் நிறுவனத்தின் எரிவாயு குழாய் பதிக்கும் திட்டத்தைச் செயற்படுத்த அனுமதிக்கக்கூடாது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

அப்போதைய முதல்வர் ஜெயலலிதா, 2013 மார்ச் மாதம் கெயில் நிறுவனம் விவசாய விளைநிலங்கள் வழியாக எரிவாயுக் குழாய்களைப் பதிக்கும் திட்டத்தை உடனடியாகக்கைவிட வேண்டும் என்று தமிழக சட்ட மன்றத்தில்தீர்மானம்கொண்டு வந்தார்.

ஆனால், கெயில் நிறுவனம் உயர்நீதிமன்றம் சென்று தமிழக அரசின் உத்தரவுக்குத் தடை ஆணை பெற்றது. இதனை எதிர்த்துத் தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் 2013 நவம்பர் மாதம் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்தது.

இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், 2016 பெப்ரவரி 2 இல் இறுதித் தீர்ப்பை அளித்தது. தமிழக அரசின் உத்தரவு செல்லாது என்று கூறிய உச்சநீதிமன்றம், எரிவாயு குழாய் பதிக்கும் கெயில் நிறுவனம் திட்டத்தைத் தொடரலாம் என்றும், மத்திய அரசின் திட்டத்தை தடை செய்ய மாநில அரசுக்கு உரிமை இல்லை என்றும் உத்தரவிட்டது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்துத் தமிழக அரசு மறு சீராய்வு மனுத்தாக்கல் செய்து இன்னும் இவ்வழக்கு நிலுவையில் இருக்கின்றது.

பெற்றோலிய அமைச்சகம், கெயில்நிறுவனம்மற்றும் தமிழக அரசு இணைந்து விவசாயிகளின் அச்சத்தைப் போக்கி ஒரு ஆண்டுக்குள் இந்தத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும் என்று பிரதமர் அறிவுறுத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளி வந்துள்ளன.

கொச்சி-பெங்களூர், குஜராத் அகமதாபாத் காந்தி நகர் போன்ற திட்டங்களில் நெடுஞ்சாலை வழியாகவே எரிவாயு கொண்டு செல்கின்ற போது, தமிழகத்தில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் வகையில் மத்திய அரசு மீண்டும் மீண்டும் உத்தரவு போடுவதை ஏற்க முடியாது.

மத்திய பா.ஜ.க. அரசுக்கு அடிபணிந்து தமிழகத்தை வஞ்சிக்கும் திட்டங்களுக்கு பழனிச்சாமி அரசு ஒரு போதும் துணை போகக் கூடாது. கெயில் நிறுவனத்தின் எரிவாயு குழாய் பதிக்கும் திட்டத்தைச் செயற்படுத்த அனுமதிக்கக்கூடாது என்று தெரிவித்துள்ளார். (8)

# தமிழக விவசாயிகள் போராட்டம் நீடிப்பு



(டில்லி)

காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தல், பயிர்க் கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 84ஆவதுநாளான நேற்று முன்தினம் சவரம் செய்யும் போராட்டத்தில் விவசாயிகள் ஈடுபட்டனர்.

விவசாயிகள் கடனுக்கு அடமானம் வைத்த நிலங்களை வங்கி அதிகாரிகள் ஜப்தி செய்து ஏல நடவடிக்கை எடுத்திருக்கும் நிலையில், அதை அரசு தடுக்காததால் விவசாயிகள் சவ்ர தொழிலுக்கு மாறிவிட்டனர் என்பதை சித்திரிக்கும் வகையில் இப்போராட்டம் நடத்தப்பட்டதாக விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டது.

தமிழக விவசாயிகள் குழுமி இருக்கும் ஜந்தர் மந்தர் சாலையில் போராட்டம் நடத்த தேசிய பசுமை தீர்ப்பாயம் தடை விதித்து இருக்கிறது.

எனினும் அங்கு தமிழக விவசாயிகள் மற்றும் வேறு சில மாநிலத்தினரின் போராட்டம் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (8)

## பாகிஸ்தானில் பயங்கர விபத்து ; 14 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நேற்று முன்தினம் பேருந்து மீது வான் நேருக்கு நேராக மோதிய விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர்.

பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள மஸ்ட்டாங் பகுதியில் நேற்று முன்தினம் அதிவேகமாக வந்த ஒரு வான் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த பேருந்தின் மீது பயங்கரமாக மோதியது. இந்த விபத்தில் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். காயமடைந்த 30 பேர் அருகாமையில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக் கிடமாக உள்ளதால் இவ்விபத்தில் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (8)

# நீண்டதூர ஏவுகணை... வடகொரியா...

## ரஷ்ய எம்.பி...

(மொஸ்கோ)

நீண்ட தூர ஏவுகணை சோதனைக்கு வடகொரியா தயாராகி வருகிறது என அங்கு சென்று வந்த ரஷ்ய எம்.பி. தெரிவித்துள்ளார். இதனால் புதிய பரபரப்பு ஏற்பட்டுள்ளது

அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு சிம்ம சொப்பனமாக வடகொரியா விளங்கி வருகிறது. அந்த நாட்டின் அச்சுறுத்தல்களை கண்டுகொள்ளாமல், ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் அடுத்தடுத்து விதித்து வருகிற பொருளாதார தடைகளை பொருட்படுத்தாமல், வடகொரியா தொடர்ந்து அதிரடியாக



அணுகுண்டுகளை வெடித்து சோதித்து வருகிறது.

இந்நிலையில் வடகொரியாவுக்கு ரஷ்ய பாராளுமன்றத்தின் சர்வதேச விவகாரங்கள் குழு உறுப்பினரான ஆன்டன் மொரோசவ் எம்.பி. கடந்த

# வன்முறையில் ஈடுபடு... பிளாஸ்டிக் குண்டுகள்...

## —சி.ஆர்.பி...



(மீரட்)

ஜம்மு-காஷ்மீரில் வன்முறையில் ஈடுபடும் இளைஞர்களை கலைந்து செல்ல வைக்க, 21 ஆயிரம் பிளாஸ்டிக்குண்டுகள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

காஷ்மீரில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பாதுகாப்பு படையினருக்கு எதிராக அவ்வப்போது பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் சில நேரங்களில் பாதுகாப்பு படையினர் மீது கல்வீச்சு போன்ற தாக்குதல்களிலும் ஈடுபடுகின்றனர்.

இப்போராட்டக்காரர்களை அப்புறப்படுத்தும் பணிகளை மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினர் (சி.ஆர்.பி.எப்.) மேற்கொண்டு வருகின்றனர். இதில் மோதல் ஏற்படும் போது போராட்டக்காரர்கள் மீது இறப்பர் குண்டுகளால் (பெல்லட்) துப்பாக்கிச்சூடு நடத்தப்படுகிறது. இதில் பலத்த காயம் ஏற்படுவதுடன், சில நேரங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ணை சோதனைக்கு தயாராகிறது
## ...பி.தகவல்

2 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை பயணம் மேற்கொண்டு விட்டு மொஸ்கோ திரும்பியுள்ளார்.

இந்த பயணத்தை தொடர்ந்து ஆன்டன் மொரோசவ் எம்.பி. தெரிவித்ததாவது.

வடகொரியா புதிய நீண்ட தூர ஏவுகணை சோதனைக்கு தயார் ஆகி வருகிறது. அவர்களது ஏவுகணை அமெரிக்காவின் மேற்கு கடலோரப் பகுதியை தாக்கும் வல்லமை படைத்தது என்பதை நம்புவதற்கு ஏற்ற வகையில் புள்ளி விபரங்கள் சொல்கிறார்கள்.



எதிர்காலத்தில் மேலும் ஒரு நீண்ட தூர ஏவுகணையை ஏவி சோதிப்பதற்கு அவர்கள் எண்ணியுள்ளனர். பொதுவாக, அவர்களது மனப்பாங்கு போராடும் மனப்பாங்காக உள்ளது எனத் தெரிவித்தார். (8)

## ...டுபவர்களை தடுக்க ...ள் பயன்படுத்தப்படும்
## ...ி.எப். தகவல்



உயிரிழப்புகளும் அதிகரித்து வருகிறது.

இதனால் இந்த பெல்லட் துப்பாக்கிகளுக்கு பதிலாக மாற்று ஆயுதங்களை பரிசீலிக்க வேண்டும் என பல்வேறு தரப்பிலும் கோரிக்கைகள் எழுந்தன. எனவே இறப்பர் குண்டுகளுக்கு பதிலாக பிளாஸ்டிக் குண்டுகளை இராணுவ ஆய்வு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டி.ஆர்.டி.ஓ.) அதிகாரிகள் வடிவமைத்து, புனேவில் உள்ள இராணுவ தளபாட தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டன.

இதில் சுமார் 21 ஆயிரம் பிளாஸ்டிக் குண்டுகள் காஷ்மீருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன். உயிரிழப்புகளை குறைக்கும் இந்த குண்டுகளை அனைத்து விதமான ஏ.கே. ரக துப்பாக்கிகளிலும் பொருத்தி பயன்படுத்த முடியும்.

இது காஷ்மீரில் உள்ள அனைத்து சி.ஆர்.பி.எப். படைப்பிரிவினருக்கும் வழங்கப்படும் என மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (8)

# 180 ஐ.எஸ்ஸினரை கொன்று குவித்த ரஷ்யாவின் விமானப் படையினர்

## சிரியாவை முற்றுமுழுதாக மீட்கும் உச்சக்கட்ட போர்

(மொஸ்கோ)

சிரியாவில் ரஷ்யா நாட்டு விமானப் படைகள் நடத்திய ஆவேசத் தாக்குதல்களில் கடந்த 24 மணி நேரத்தில் 180 பேர் கொல்லப்பட்டனர்.

சிரியா நாட்டில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருக்கும் கடைசி நகரமான மயாடீன் நகரை கைப்பற்ற அந்நாட்டின் அரச படைகள் உச்சக்கட்ட தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

அவர்களுக்கு துணையாக ரஷ்யா நாட்டின் போர் விமானங்களும் வான்வழி தாக்குதலை நடத்திவருகிறது.

இந்நிலையில், மயாடீன் நகரில் ரஷ்ய விமானப்படைகள் கடந்த 24 மணி நேரத்தில் நடத்திய தாக்குதல்களில் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த 80 பேர் கொல்லப்பட்டனர்.

இதேபோல் அல்பு கமால் நகரில் 40 பேர் கொல்லப்பட்டனர். இதுதவிர, வெளிநாடுகளில் இருந்து வந்து ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் இணைந்து சண்டையிட்டுவரும் மேலும் 60 பேர் கொல்லப்பட்டதாக ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இருந்து நேற்று வெளியான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



இதற்கு முன்னதாக ரஷ்ய விமானப் படைகள் நடத்திய தாக்குதல்களில் வடக்கு கசாகஸ் பகுதியில் உள்ள ஐ.எஸ். படையை சேர்ந்த மூத்த தளபதிகள் ஒமர் அல்-ஷிஷானி, அலா அல்-டின் அல்-ஷிஷானி, சலா அல்-டின் ஷிஷானி ஆகியோரும் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

# மாவோயிஸ்ட் அமைப்பினரிடமிருந்து குழந்தைகளைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்

## ஐ.நா. பொதுச்செயலர் அறிக்கை

(நியூயோர்க்)

சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் மாநிலங்களில் பாதுகாப்பு படையினருக்கு எதிரான சண்டையில், மாவோயிஸ்ட் அமைப்பினர் குழந்தைகளை பயன்படுத்தி வருவதனால் அவ்வமைப்பிடம் இருந்து குழந்தைகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு ஐ.நா., பொதுச்செயலர் அன்டோனியோ குற்றேரஸ் தெரிவித்துள்ளார். குழந்தைகள் ஆயுதங்கள் ஏந்துவது தொடர்பான அறிக்கையை ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குற்றேரஸ் தயாரித்துள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது.

அரசுக்கு எதிரான சண்டையில், மாவோயிஸ்ட் அமைப்பினர் குழந்தைகளை பயன்படுத்தி வருகின்றனர். இது குறித்த அறிக்கை ஐ.நா.வுக்கு கிடைத்துள்ளது. அங்கு நடைபெறம் மோதலால், குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். காஷ்மீரில் பதற்றம் ஏற்படும் போதும் குழந்தைகளுக்கு அதிக பாதிப்பு ஏற்படுகிறது.



இந்திய அரசின் அறிக்கைப் படி, காஷ்மீர் மாநிலத்தில் பயங்கரவாதிகள் 30 பாடசாலைகளுக்கு தீவைத்தனர். நான்கு பாடசாலைகளை இராணுவ பயன்பாட்டுக்காக பாதுகாப்புபடையினர்பலவாரங்கள் பயன்படுத்தியுள்ளனர்.

குழந்தைகள் மாவோயிஸ்டுகள் அமைப்பில் சேர்வதை தடுக்க இந்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் ஏற்கனவே அந்த அமைப்புகளில் இணைந்திருக்கும் குழந்தைகளை பத்திரமாக மீட்கும் நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளின் பின்னணியில் எந்தவொரு வன் முறையிலிருந்தும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசை வலியுறுத்துகிறேன். மாவோயிஸ்டுகள் அமைப்புகளுக்கு எதிரான பாதுகாப்புப் படையினரின் தாக்குதல்களில் குழந்தைகள் கொல்லப்படுகின்றனர்.

மாவோயிஸ்ட் அமைப்புகளில் இருந்து மீட்கப்பட்ட குழந்தைகளை தகவல் அளிப்பவர்களாக பொலிஸார் பயன்படுத்துவதாக கூறப்படுகிறது. இருப்பினும் சில கட்டுப்பாடுகளின் காரணமாக இந்த தகவலை உறுதி செய்ய முடியவில்லை என்றுள்ளது. (8)

# இந்திய விமானப்படையின் 85ஆவது ஆண்டு தினம்

## ஜனாதிபதி - பிரதமர் வாழ்த்து

(டில்லி)

இந்திய விமானப்படையின் 85-வது ஆண்டு விழா நேற்று கொண்டாடப்பட்டதனை முன்னிட்டு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் மற்றும் பிரதமர் மோடி தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

இந்திய விமானப் படையானது கடந்த 1932ஆம் ஆண்டு ஒக்டோபர் 8 ஆம் திகதி உருவாக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசால் ராயல் இந்தியன் ஏர் போர்ஸ் என்று அழைக்கப்பட்டு வந்த விமானப்படை, சுதந்திரம் அடைந்ததற்கு பின்னர் இந்தியன் ஏர் போர்ஸ் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்நிலையில், விமானப் படை உருவாக்கப்பட்டதன் 85 ஆவது ஆண்டு விழா நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதை ஒட்டி உத்தரப் பிரதேச மாநிலம் காஸியா பாத்தில் உள்ள விமானப்படை தளத்தில் விமானப்படை வீரர்கள் சாகச பயிற்சியில் ஈடுபட்டனர்.

இதேபோல நாட்டில் உள்ள பிற விமானப்படை தளங்களிலும் ஆண்டு தினம் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

விமானப்படை உருவாக்கப்பட்ட தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் மற்றும் பிரதமர் மோடி தங்களது வாழ்த்துக்களை டுவிட்டர் மூலமாக தெரிவித்துள்ளனர். (8)

# சந்திரனில் மீண்டும் ஆய்வு

(நியூயோர்க்)

அமெரிக்கா மீண்டும் சந்திரனில் ஆராய்ச்சி மேற்கொள்ள திட்டமிட்டுள்ள நிலையில், நிலாவுக்கு மனிதர்களை அனுப்ப இருப்பதாக நாசா தெரிவித்துள்ளது.

சந்திரனுக்கு ரஷ்யா 'புட்னிக்' என்ற நாயை வெற்றிகரமாக அனுப்பி திரும்ப கொண்டு வந்தது. அதற்கு போட்டியாக அமெரிக்கா 1969ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி முதன் முறையாக மனிதர்களை அனுப்பியது.

அங்கு இறங்கிய நீல் ஆம்ஸ்ட்ரோங் பெயர் சரித்திரத்தில் இடம்பெற்றது. சந்திரனில் இறங்கிய அவர் அங்கு அமெரிக்க கொடியை நாட்டினார். அது உலக வரலாற்றில் பெரிய மைல் கல்லாக உள்ளது.

அதன்பின்னர் அமெரிக்கா சந்திரனில் ஆய்வு செய்வதை நிறுத்தி விட்டு செவ்வாயில் கிரக ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. ஆனால் இந்தியாவின் இஸ்ரோ மட்டுமே சந்திரனில் ஆய்வு செய்தது.

இந்த நிலையில் தற்போது அமெரிக்கா மீண்டும் சந்திரனில் ஆராய்ச்சி மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. இத்திட்ட தொடக்க விழா சமீபத்தில் வோஷிங்டனில் நடந்தது.

அப்போது 'நிலாவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பும் திட்டம் மேற்கொள்ள இருக்கிறோம். இம்முறை வெறும் கொடியை மட்டும் நாட்டிவிட்டு வரும் பயணமாக அது இருக்காது. இனி நடக்க இருக்கும் அனைத்து வானியல் ஆராய்ச்சிக்கும் அது தான் தொடக்க புள்ளியாக இருக்கும் என்று துணை ஜனாதிபதி மார்க் பென்ஸ் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிரகத்துக்கு மனிதனை அனுப்ப இருக்கும் திட்டத்துக்கு இது முன்னோட்டமான பயணம் என்று 'நாசா' கூறியுள்ளது. (8)

# கலவரத்தைத் தூண்ட 1.25 கோடி ரூபாய் செலவு செய்த குர்மீத் ராம் சிங்கின் வளர்ப்பு மகள்

## விசாரணையில் பொலிஸார் தகவல்

(பஞ்சகுலா)

பலாத்கார வழக்கில் சாமியார் குர்மீத் ராம் ரகீம் சிங் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டதும், வன்முறையை தூண்ட 1.25 கோடியை ஹனி பிரீத் சிங் செலவிட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குர்மீத் சிங் குற்றவாளி என தீர்ப்பு வெளியானதும் அவரது ஆதரவாளர்கள் பல்வேறு பகுதிகளில் கலவரத்தில் ஈடுபட்டனர். இந்த கலவரத்தில் 36 பேர் பலியாகினர். அரியானாவில் பல இடங்களில் தாக்குதலில் ஈடுபட்ட 524 ஆதரவாளர்களை பொலிஸார் கைது செய்தனர்.

இந்த வன்முறை தொடர்பான வழக்கில் சாமியாரின் வளர்ப்பு மகள் ஹனிபிரீத் இன்சான் முக்கிய குற்றவாளியாக சேர்க்கப் பட்டிருந்தார். தலைமறைவாக இருந்த அவரை பொலிஸார் [illegible] யில், கடந்த 3 ஆம் திகதி அவரை கைது செய்தனர்.



இதற்கிடையே கலவரம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சாமியாரின் கார் சாரதி ராகேஷ் குமாரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், கலவரத்தை தூண்ட ஹனிபிரீத் பணம் செலவு செய்தது தெரியவந்துள்ளது. வன்முறையை தூண்டுவதற்காக கடந்த ஓகஸ்ட் 25 ஆம் திகதி தேரா சச்சா அமைப்பின் பஞ்சகுலா கிளைத் தலைவர் சம்கவுர் சிங்கிடம் ரூ.1.25 கோடி பணத்தை ஹனிபிரீத் கொடுத்ததாக விசாரணையின் போது ராகேஷ் கூறியதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராகேஷ் குமார் தற்போது சிறப்பு விசாரணைக் குழுவின் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பதியில் ஜனாதிபதி மைத்திரி





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழிபாடுகளில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் திருப்பதி சென்ற டைந்தார். திருப்பதி ஏழு மலையான் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள் வதற்காக ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன அவரது துணைவியாருடன், நேற்று முன்தினம் அங்கு சென் றார்.

## தமிழ் அமைப்புக்களுக்குப் பயந்து பாதையை மாற்றியதாக தகவல்

நேற்று அதிகாலை சுப்ர பாத சேவையில் வழிபாடு களை செய்வதற்காக நேற்று முன்தினம் திருப்பதி சென்ற அவர் பத்மாவதி விருந்தினர் மாளிகையில் தங்கினார்.

அங்கு அவருக்கு மாவ ட்ட ஆட்சியர், திருப்பதி ஆலய நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் பொலிஸ் அதி காரிகள் வரவேற்பு அளித் தனர்.

சென்னை- திருப்பதி நெடுஞ்சாலையைத் தவிர் த்து. அவர் பெங்களூர் திருப் பதி நெடுஞ்சாலை வழியா கவே திருப்பதி சேர்ந்தார்.

தமிழ் அமைப்புகள், ஜனா திபதி மைத்திரிக்கு எதிராகப் போராட்டம் நடத்த வாய்ப் புள்ளதாக கிடைத்த தகவல களை அடுத்து அதனைத் தவிர்ப்பதற்காக, பயணப் பாதை மாற்றப்பட்டதாக, உயர்மட்ட வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

அதேவேளை, ஜனாதிப தியின் பயணத்தை முன் னிட்டு, சித்தூர் மாவட்டத் திலும், திருப்பதி நகரிலும் பொலிஸ் பாதுகாப்பு அதி கரிக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் திருப் பதி சென்ற ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன, திடீரென அங்கிருந்து 5 கி.மீ தொலை வில் உள்ள சிறி வாரி பாடா லுவுக்குச் சென்று தரிசனம் செய்தார்.

ஜனாதிபதியின் பயணத் திட்டத்தில் இந்தப் பயணம் இடம் பெற்றிருக்கவில்லை. திடீரென முடிவெடுத்தே ஜனாதிபதி அங்கு சென் றிருந்தார்.

இது நாராயணகிரி மலை களின் உச்சியில் உள்ள புராணகாலத்து இடமாகும். திருப்பதியில் உள்ள ஏழு மலைகளிலும் மிகவும் உயர மானது இந்த இடம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 18 ஜெட் போர் விமானங்களை கொள்வனவு செய்கிறது இலங்கை

இலங்கை விமானப் படை ஜெட் போர் விமானங் கள் உள்ளிட்ட 18 புதிய விமா னங்களைக் கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள இலங்கை விமானப்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் கிஹான் செனவிரத்ன.

"இலங்கை விமானப் படைக்கு ஜெட் போர் விமா னங்கள், போக்குவரத்து விமானங்கள், பயணிகள் விமானங்கள் உள்ளிட்ட 18 விமானங்களைக் கொள் வனவு செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளாக இருந்து வரும் விமானங் களின் தேவைகளைப் பூர் த்தி செய்யும் வகையில் புதிய விமானங்கள் கொள்வனவு செய்யப்படும்.

தற்போதுள்ள பழைய விமானங்களுக்குப் பதிலாக, நவீன கால தேவைகளுக்கு ஏற்ற விமானங்கள் வாங்கப் படும்.

புதிய விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப் பட்டுள்ளன.

சில விமானங்களுக்கு உதிரிப்பாகங்கள் தேவைப் படுகின்றன. இந்த உதிரிப் பாகங்களின் விலையும் மிக அதிகம்.

இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகளில் பிரதான மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடல் சார் கண்காணிப்பை மேற் கொள்வதற்கான விமானங் கள் தற்போது இலங்கை விமானப்படைக்குத் தேவை ப்படுகிறது.

முன்னர் இலங்கை விமா னப்படைக்கு அமெரிக்கா, சீனா, பிரித்தானியா, ரஷ்யா, உக்ரேன் ஆகிய நாடுகளி டம் இருந்து விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

தற்போது கேள்விப்பத் திரங்களுக்கு அமைய சில நாடுகள் விமானங்களை வழங்க முன்வந்துள்ளன. இவற்றை கவனமாக ஆய்வு செய்த பின்னரே முடிவு எடுக் கப்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# விமல், கம்மன்பில விலகவில்லை



## ரஞ்சித் சொய்ஷா தகவல்

(கொழும்பு)

பங்காளிக் கட்சிகளி டையே எந்தவித உள்வீட்டு மோதல்களும் இல்லை யென கூட்டு எதிர்க்கட்சியின் பிரதித் தலைவர் ரஞ்ஜித் சொய்ஷா எம்.பி. தெரிவித் துள்ளார்.

விமல் வீரவன்ச தலை மையிலான தேசிய சுதந்திர முன்னணி. உதய கம்மன் பில தலைமையிலான தூய ஹெல உறுமய என்பவற்றை கூட்டு எதிர்க்கட்சியின் செயற் பாடுகளிலிருந்து ஒதுக்கியு ள்ளதாக வெளியாகும் செய் திகளில் எந்தவித உண்மை யும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் ஒன்று நெருங் கியுள்ள நேரத்தில் இது போன்ற பிரசாரங்களை எதிர்த் தரப்பினர் திட்டமிட்டு பரப்பி வருவதாகவும் ரஞ்சித் சொய்ஷா மேலும் கூறியுள் ளார். (இ-7)



# வில்பத்து வனத்தில் மிருக வேட்டை 7 பேர் சமைத்த உணவுடன் கைது

(கொழும்பு)

வில்பத்து தேசிய வனப் பிரதேசத்தில் மிருக வேட் டையில் ஈடுபட்டிருந்த ஏழு பேரை வனப் பாதுகாப்பு அதி காரிகள் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ள தாகவும், அவர்கள் புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படவுள்ளதாகவும் எளுவக் குளம், வில்பத்து வனப் பாதுகாப்பு உப காரியாலய அதிகாரியொருவர் தெரிவித் துள்ளார்.

இவர்களிடமிருந்து வேட் டைக்குப் பயன்படுத்தும் ஆயுதங்களும், வேட்டை யாடிய மிருகத்தின் சமைத்த உணவும் அதிகாரிகளினால் மீட்கப்பட்டுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### விமர்சனம் வேண்டாம்!

மற்றவர்களைப் பற்றிக் குறிப்பிடுவதில் மூன்று வகையுண்டு. முதலாவது அவர் களது இயல்புகளை உள்ளபடி சொல்வது, இரண்டாவது பாராட்டுவது, மூன்றாவது மோசமாக விமர்சிப்பது.

இவையல்லாமல் நான்காவது ஒரு வழியும் உண்டு. அது, வாயைத் திறக்காமல் இருப்பது. நம்மில் பலர் மூன்றாவது வழி யைத் தான் அதிகம் பின்பற்றுகிறோம்.

நான் சிலரைச் சந்தித்திருக்கின்றேன். இவர்களிடம் பிறரைப் பற்றிப் பேச்சு எடுத் தாலே சிரித்துக் கொள்வார்கள். வாயைத் திறந்து ஒரு கருத்தையும் சொல்லமாட்டார் கள். ஏண்டா இவர்களிடம் இந்தப் பேச்சை எடுத்தோம் என்று நாம் எண்ணுமளவிற்கு நம்மைப் கொண்டு போய் நிறுத்தி விடு வார்கள்.

ஒரு வகையில் சிந்தித்துப் பார்த்தால் ஒருவரைப் பற்றி நாம் மட்டும் பெரிய பிரசங் கமே செய்கிற போது எப்படி இவர்களால் மட்டும் வாயைத் திறக்காமல் இருக்க முடி கிறது என்று நான் வியப்பது உண்டு. இவர் கள் சர்வ ஜாக்கிரதையான ஆசாமிகள். இவர்கள் எந்த வம்பிலும் சிக்குவது இல்லை. எல்லோருக்கும் நல்லவர்களாக வாழ்ந்து விடுகிறார்கள். நமக்கு மிகமிக வேண்டி யவர்களைப் பற்றிக் கூட ஒரு மூன்றாவது மனிதர் கருத்துக் கேட்கிறார் என்பதற்கா கக் குறைகளைப் பற்றியே அதிகம் விவா திக்கின்றோம்.

(போயும் போயும்) இவர்களைச் சந் தோசப்படுத்த வேண்டும் என்பதற்காக நம் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருப் பவர்களைக் கூட மட்டம் தட்டிப் பேச ஆரம் பித்து விடுகிறோம்.

எல்லா மனிதர்களிடமும் சில இழிவான கண்ணோட்டங்கள் உண்டு. இவை மனத் தில் தோன்றும் போதெல்லாம் சேர்த்து வைத்துக் கொண்டு எப்போது வெளியே விடுவோம் என்று காத்திருக்கும் வேளை யில் ஒரு சக ரயில் பயணியிடம் போய் விமர்சிக்க ஆரம்பிக்கின்றோம். வருகிறது வினை!

இதிலிருந்து நாம் விடுபட முடியும். முத லில் யாரிடமாவது சொல்லித் தீர்க்க வேண் டும் என்கிற நினைப்பு வேரொடு பிடுங்கி எறியப்பட வேண்டும். இரண்டாவதாக கால மெல்லாம் கஷ்டப்பட்டுப் பெற்ற நல்ல பெய ரையும் நல்ல வாய்ப்புக்களையும் இப்ப டிப்பட்ட வாய் ஓட்டைகளின் மூலம் வடிய விட்டு நாம் வற்றிப் போய்விடக் கூடாது என்கிற நினைப்பு நமக்குள் அழுத்தமாக இருக்க வேண்டும். மற்றவர்களைப் பற்றிய சிறுசிறு குறைபாடுகளை நம்மிடம் சொல்லி நம் வாயைக் கிளறி அவற்றை உடைய வர்களிடம் போய்ச் சொல்லி நல்ல பெய ரைச் சம்பாதித்துக் கொள்ளும் சதிக் கும்ப லின் பிடிகளிலிருந்து நாம் விடுபட்டாக வேண்டும்.

நம் விரல்களைக் கொண்டே நம் கண் களைக் குத்தும் இவர்களின் வலைக்கு நாம் இனியும் இரையாவதாவது?

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.க., ஐ.தே.கவுக்கு அளிக்கும் வாக்குகள் பிரயோசனமற்றவை



## த.தே.கூ.எம்.பி.யோகேஸ்வரன் தெரிவிப்பு துரைராஜசிங்கம் மீதும் கடும் விமர்சனம்

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சிக்கோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ தமிழ் மக்கள் அளிக்கும் வாக்குகள் வேறு சமூகத்தவர்களுக்குப் போய்ச் சேர்வதால் அவை பிரயோசனமற்றவையாகின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.**

ஏறாவூர் ஐயன்கேணி தமிழ் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எம். மனோகரன் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற முப்பெரும் விழா நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழினம் தான் இழந்தவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்கு கல்வி இன்றியமையாததாகும்.

எல்லாவற்றையும் விட கல்வி சார்பாக ஏங்களை வளப்படுத்த வேண்டிய காலத் தேவை நமக்கு இருக்கின்றது.

ஆனால் இலங்கையில் போரால் நலிவடைந்த கிழக்கு மாகாணம் கல்வியிலும் ஒன்பதாவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டிருப்பது வருத்தமளிக்கின்றது.

கிழக்கு மாகாணம் ஏன் இந்த நிலைக்கு வந்தது என்று சீர்தூக்கிப் பார்ப்பது நல்லது. அதிலும் தமிழ்ப் பகுதிப் பாடசாலைகள் மிகக் குறைந்த வளங்களோடும் பின்தள்ளப்பட்ட நிலையிலும் இருக்கின்றன.

கிழக்கு மாகாண சபையிலே கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒருவருக்குக் கிடைத்திருந்தும் பதவியிலிருந்த காலத்தில் அவர் தனது பணிகளை சிறந்த முறையில் செய்து முடித்தாரா என்பது. என்னைப் பொறுத்தவரையில் கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது.

நானும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவனாக இருந்தபோதிலும் கூட உண்மையை உரத்துச் சொல்ல நான் தயங்கப் போவதில்லை.

தன்னிடம் அதிகாரங்கள் இருக்கும்போது அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வளப் பங்கீடுகள் தேவையான பிரதேசங்களாக தமிழர் பிரதேசங்கள் இருந்து கொண்டிருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழர்கள் வாழ்கின்ற 10 பிரதேச செயலாளர் பிரிவுகளும் கூடுதல் வறுமையோடு இருக்கின்றன.

ஆனாலும் கடந்த காலங்களிலே தமிழ்ப் பிரதேசத்தின் அபிவிருத்தி சார்ந்த நடவடிக்கைகள் கண்துடைப்பாக நடைபெற்றிருக்கின்றன.

நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தாலும் நீண்ட காலமாகத் தொடர்கின்ற இனப் பிரச்சினையின் தீர்வுக்கு ஏதோவொரு வகையில் நியாயத்துடன் விடயத்தை அணுகி தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற வகையில் அரசாங்கத்துடன் ஆதரவாக உள்ளோம்.

ஆனாலும் அரசாங்கம் எங்களது ஆதரவைப் பெற்றிருந்த போதிலும் மத்திய அரசாங்க ஒதுக்கீடாக இருந்த போதிலும் மாகாண அரசாங்க ஒதுக்கீடாக இருந்த போதிலும் நாம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றோம். இதற்கான ஆதாரபூர்வமான தரவுகள் என்னிடம் உள்ளன.

வைத்தியசாலைகள் புனரமைப்பு, நீர் வழங்கல் திட்டம், நகர அபிவிருத்தி, இப்படி புறக்கணிப்புப் பட்டியல் நீண்டு செல்கின்றது.

அடுத்த சமூகத்தை நான் குறைகூறவில்லை, அவர்களுக்கும் அபிவிருத்தி நடைபெறத்தான் வேண்டும், ஆனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகம் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்படக்கூடாது என்பதே எமது ஆதங்கமாகும்.

தமிழ் சமூகத்தின் இழப்புக்கள் பற்றி அடுத்த சமூகத் தலைவர்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் தான் சிந்தித்து செயற்பட்டு வந்திருக்கின்றது.

இந்த நாட்டிலே என்ன தீர்வு வந்தாலும் தமிழ் பேசும் சமூகம் என்ற வகையில் தான் அணுகுமுறைகளைச் செய்து தீர்வைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம்.

இலங்கையில் மாகாண சபையைக் கோரிய தமிழ் சமூகத்திற்கு அதன் பலாபலன்கள் கிட்டாத போதிலும் ஏனைய சமூகங்கள் அதனை நன்றாக அனுபவிக்கின்றன.

இது வேதனைக்குரியது. நாங்கள் என்னத்தை சாதித்திருக்கிறோம் என்று மக்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டாலும் நாங்கள் இயன்ற வரைச் செய்திருக்கின்றோம்.

அமைச்சுப்பதவிகளை நாங்கள் பெற்றால் அது எங்களுக்காக இந்த மண்ணிலே எமது உறவுகள் செய்த உயிர்த்தியாகங்களை நாங்கள் கொச்சைப்படுத்தியவர்களாக, எதிர்கால சந்ததிக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்காத சமூகமாக ஆகிவிடுவோம்.

அற்ப சலுகைகளுக்காக நாம் ஒருபோதும் சோரம் போகமாட்டோம் என்று எனது மக்களுக்குச் சொல்லிவைக்க விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)





கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் ஆசிரியர் தின விழா கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச சபையின் முன்னாள் உபதலைவர் எஸ்.தர்மலிங்கமும் கலந்துகொண்டார். வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தனது 2017ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஒலிபெருக்கித்தொகுதியினை பாடசாலை அதிபரிடம் கையளித்தார். இந்நிகழ்வில் விருந்தினர்களுடன், அதிபர், ஆசிரியர் , மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.







நீர்வேலி சி.சி.த.க.பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆசிரியர் தின விழா அதிபர் [illegible] தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலமைச்சர் வேட்பாளர்களுக்கான

# பனிப்போர் ஆரம்பம்

### மூன்று மாகாணங்களில் முண்டியடிக்கும் முன்னாள் உறுப்பினர்கள்

(கொழும்பு)

**வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்களிடையே பனிப்போர் ஆரம்பித்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

மேற்குறிப்பிட்ட மூன்று மாகாண சபைகளின் முன்னாள் முதலமைச்சர்கள், அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள்அதே போன்று தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், வர்த்தக பிரமுகர்கள் எனப் பலரும் முதலமைச்சர் வேட்பாளராவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான பனிப்போருக்கு மத்தியில் கலைக்கப்பட்டுள்ள மூன்று மாகாண சபைகளில் இரண்டில் முதலமைச்சர்களாக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு இம் முறை முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் வாய்ப்பு கிடைக்காது எனவும் தவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக எதிர்வரும் தேர்தல்களில் களமிறங்கவுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் குறித்த சுதந்திரக்கட்சி உறுப்பினர்களை தம்வசம் இழுக்கும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக வும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## யுத்தக் குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும்

# கருணா வலியுறுத்தல்

தமிழர்களுக்கு எதிரான மிலேச்சைத்தனமான யுத்தத்தில் ஜெகத் ஜெயசூரிய குற்ற மிழைத்தார் என சரத் பொன்சேகா கூறுவாராயின், அந்தக்குற்றங்களுக்கு அவரும் பொறுப்புக்கூற வேண்டும் என மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பிரதி அமைச்சராக செயற்பட்ட விநாயக மூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியான பழி வாங்கலை மேற்கொள்வதற்காகவே ஜெகத் ஜெயசூரிய மீது சரத் பொன்சேகா குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாக குறிப்பிட்ட முரளிதரன், இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அப்போது உள்ளக விசாரணைபொறிமுறையொன்றை அமைத்திருந்தார் எனவும் கூறியுள்ளார்.

முன்னாள் பிரதி அமைச்சர் முரளிதரன் தலைமையிலான தமிழ் ஐக்கிய சுதந்திர முன்னணியின் மாதந்த பொதுக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் கல்லடியிலுள்ள தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் வடக்கு கிழக்கிலுள்ள கட்சியின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த போதே மேற்கண்டவாறு கூறினார். (இ-7)

# வைத்தியசாலையில் நிகழும் மரணங்களுக்கு உரிய விசாரணைகோரி யாழில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலையில் நிகழும் மரணங்கள் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டுஅதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்.போதனா வைத்திய சாலையின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சையின் போது மரணமடையும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்வதனை நீங்கள் யாவரும் நன்கு அறிவீர்கள். இதில் மருத்துவ தவறுகளால் நிகழும் மரணங்களுக்கு எதிராகவும் அவ்வாறான மரணங்கள்எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தக் கவனயீர்ப்பை ஏற்பாடு செய்திருந்தோம்.

அரச வைத்தியசாலைகள் தரமிழந்து போகின்றது என்றால் அதை நம்பியிருக்கும் மக்களின் நிலையென்ன? எனத் தெரிவித்துள்ள போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்த தமிழ்த் தேசியப்பண்பாட்டு பேரவை,

❖ யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தொற்று நோய்கள் மூலமான மரணங்களைத் தடுப்பதற்கு அதியுச்ச தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

❖ பொதுக் கட்டடத்தில் உள்ள பிரசவ விடுதி மற்றும் குழந்தைகள் விடுதி என்பன தனியானகட்டடத் தெகுதிக்கு மாற்றப்பட வேண்டும்

❖ விசேட கவனிப்பு தேவைப்படும் குழந்தைகள் பராம ரிப்பு நிலையத்திற்கு அருகே உள்ள சுவாச நோய் சிகி ச்சை நிலையத்தை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும்

❖ அதிதீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு என்பவற்றில் தொற்றும் மற்றும் தொற்றா நோய்களுக்கு தனியான அலகு ஏற்படுத்தப்பட வேண்டும்

❖ தீ விபத்து மற்றும் தீக்காயம்பட்ட நோயாளர்களுக்கு தனியான நோய்த் தொற்று ஏற்படாத வகையில் பூரண பாதுகாப்பான தனியான ஒரு அலகு ஏற்படுத்தப்பட வேண்டும்.



❖ தொற்றும் மற்றும் தொற்றா நோய்களுக்கான சிகிச்சை விடுதிகளை தனித் தனிகட்டடங்களில் அமைக்க வேண்டும்.

❖ நோயாளர்களை வைத்தியசாலை ஊழியர்கள் அன்போடும் கனிவோடும் நடத்த வேண்டும்.

❖ நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்கள் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் வெளிப்படைத் தன்மையுடன் நடைபெற வேண்டும்.

❖ வைத்தியசாலையில் நிகழும் மரணங்கள் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டுஅதற்கு காரணமானவர்கள் தண்டிககப்பட வேண்டும்.

❖ நோயாளிகளை தனியார் வைத்தியசாலையின் பக்கம் இழுக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் வைத்தியசாலை வைத்தியர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

❖ நீதித்துறை விசாரனைகள் காலதாமதமின்றி மேற்கொண்டு குற்றம் தொடர்பாகஉடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (இ-4)

# உள்ளூராட்சி சட்டமூலம் நிறைவேறும் சாத்தியம்

மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகளுக்கான திருத்தச் சட்டங்கள் தொடர்பான விவாதம் பாராளுமன்றில் இன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதுடன் அச்சட்ட மூலங்கள் பெரும்பாலும் நிறைவேறும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

அதேபோன்று 2018 ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவுகள், வரவுகள் உள்ளிட்ட ஒதுக்கீட்டு சட்டமூலம் ஊடகத்துறை மற்றும் நிதியமைச்சருமான மங்கள சமரவீரவினால் இன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சாதாரணமாக திங்கட் கிழமைகளில் பாராளுமன்றம் ஒன்றுகூடுவதில்லை. எனினும், மேற்கூறிய விடயங்களுக்காகவே விசேடமாக இன்று பாராளுமன்றம் ஒன்று கூடவுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள 2018 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் அடிப்படையில் ஏற்படும் துண்டுவிழும் தொகையினை எவ்வாறு நிரப்புவது என்பது தொடர்பில் நவம்பர் 10 ஆம் திகதி நிதியமைச்சரினால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு- செலவுத் திட்ட உரையில் தெளிவுபடுத்தப்படும்.

நிதியமைச்சரினால்பாராளுமன்றில் வரவு- செலவுத் திட்ட உரை சமர்ப்பிக்கப்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் ஒதுக்கீட்டு சட்ட மூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அதனடிப்படையிலேயே இன்று 2018 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வர்த்தகத் தொகுதியில் தீ

(கொழும்பு)

பண்டாரவளை நகரிலுள்ள வர்த்தகத் தொகுதியொன்றில், நேற்று அதிகாலை திடீர் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

பண்டாரவளை தீயணைப்புப் பிரிவினர் மற்றும் மின்சார சபை ஊழியர்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

எது எவ்வாறிருப்பினும், தீயினால் எவருக்கும் உயிராபத்துக்கள் ஏற்படவில்லை.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சம்பவம் குறித்த மேல திக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)



யாழ்.வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றபோது... (படங்கள்: பொற்பதி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவில் 80 நகரங்களில் பொதுமக்கள் போராட்டம்

## 250 பேர் கைது



(மாஸ்கோ)

ரஷ்யாவில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட அனுமதிக்க வலியுறுத்தி எதிர்க் கட்சி தலைவருக்கு ஆதரவாக போராட்டம் நடத்திய 250 பேர் கைது செய்யப்பட்டனர். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் 65ஆவது பிறந்த நாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

அதே நேரத்தில் நேற்று ரஷ்யாவில் 80 நகரங்களில் அவருக்கு எதிராக போராட்டங்கள் நடந்தன. ஜனாதிபதி புடினுக்கு எதிரான சக்தியாக அலெக்சி நவால்னி திகழ்கிறார். இவர் ரஷ்யாவின் எதிர்க்கட்சி தலைவராக இருக்கிறார்.

இவர் புடினுக்கு எதிராக போராட்டங்கள் நடத்தி வருகிறார். அவரை ஒடுக்க தொடர்ந்து கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே அவர் 2018ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாத சூழ்நிலை உள்ளது.

அந்த தடையை நீக்கி அவர் தேர்தலில் போட்டியிட அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தி நேற்று இப் போராட்டம் நடத்தப்பட்டது. புடினின் சொந்த ஊரான செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் நடந்த போராட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் அலெக்சி நவால்னி பங்கேற்றார். அங்கு 3 ஆயிரம் பேர் புடினுக்கு எதிரான பதாகைகளை ஏந்தியபடி போராட்டத்தில் பங்கேற்றனர்.

பொலிஸாருக்கும், பொது மக்களுக்கும்இடையே மோதல் நடைபெற்றது. தலைநகர் மாஸ்கோவிலும் போராட்டம் நடந்தது. அதில் பங்கேற்ற நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் ஜனாதிபதியின் கிரம்ளின் மாளிகைக்குள் நுழைய் முயன்றனர். அங்கு அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். இதேபோன்று சைபீரியாவின் நொவோசிபிரிஸ்க் பெர்ம், யானுட்ஸ்க், இர் ருட்ஸ்க், ஸ்மோலென்ஸ்க் உள்ளிட்ட பல நகரங்களில் நடந்தது.

போராட்டத்தில் ஈடுபட்ட 250 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் எதிர்க் கட்சி தலைவர் அலெக்சி நவால்னியும் ஒருவர். இவர் 20 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த ஆண்டில் மட்டும் இவர் 3ஆவது தடவையாக சிறைவாசம் அனுபவிக்கிறார். (8)

# அமெரிக்காவை தாக்கிய நேட் புயல்

## 35 பேர் பலி!




(நியூயோர்க்)

அமெரிக்காவின் தென் கிழக்கு மாநிலங்களை சமீபத்தில்சூறையாடிய ஹார்வே, இர்மா புயல்களை தொடர்ந்து தற்போது மத்திய மாநிலங்களை நேட் புயல் தாக்கியுள்ளது.

மத்திய அட்லாண்டிக் கடலில் உருவாகியுள்ள நேட் புயல் ஹோண்டுராஸ் மற்றும் மெக்ஸிக்கோ நாடுகளின் சில பகுதிகளை கடந்த வெள்ளிக்கிழமை தாக்கியது. 35 பேரை பலிவாங்கிய இந்தப் புயல் அமெரிக்காவின் மத்திய மாநிலங் களில் தற்போது நிலை கொண்டுள்ளது.

மிஸிசிப்பி அருகே நேட் புயல் மையம் கொண்டுள்ளதால் கனமழை பெய்து நேற்று முன்தினம் நிலச்சரிவு ஏற்பட்டிருந்தது. இந்நிலை யில், நேற்று முன்தினம் மற்றொரு பகுதியிலும் நிலச்சரிவு ஏற்பட்டது.

லூசியானா, மிஸிசிப்பி, அலாபாமா, ப்ளோரிடா உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள கடலோர நகரங்களில் கடல் அலைகள் உயரமாக வீசக் கூடும் என்பதால் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டு அப் பகுதி மக்கள் வெளியேற உத்தரவிடப்பட்டது. மேலும், மணிக்கு 140 கி.மீ. வேகத்தில் காற்று வீசி வருவதால் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நேட் புயலானது அமெரிக்காவின் தெற்கு பகுதி நோக்கி வேகமாக நகர்ந்து வரு கிறது. புளோரிடா, டெக்ஸாஸ் மாநிலத்தை புரட்டிப் போட்ட மரியா மற்றும் இர்மா புயல் அளவுக்குவலுவானது இல்லை என்றாலும் நேட் புயல் வேகமாக நகர்ந்து வருவதால் தாழ்வான இடங்களில்வெள்ள நீர் சூழும் அபாயம் உள்ளதாக எச் சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (8)

# பொலிஸாரால் தாக்கப்பட்ட இளைஞன் வைத்தியசாலையில்

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரின் எதிர்ப்பு நடவடிக்கையின் போது, பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் மாத்தறை வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ், அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக, சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் துஷாரஉபுல் தெனிய சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை அம்பாந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற எதிர்ப்பு நடவடிக்கையில் போது குறித்த இள்ளைஞர் கைதுசெய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட போது, பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால்தாக்கப்பட்டார்.

இந்தநிலையில், இச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஏனையோருடன், தாக்கப்பட்ட இளைஞரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பின்னர், அவர் தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து மேலதிக சிகிச்சைகளுக்காக மாத்தறை வைத்தியசாலைக்கு அவரை அழைத்துச் சென்றதாக துஷாரஉபுல்தெனிய மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1213

Search for people, places and things Nagendram Home

### டிலுக்சன்




### சஞ்சிகா




### ஆதவன்




### மயூரி




### வேணுஜன்




### தர்மிகன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அஞ்சல் தினம் இன்று

புராதன காலத்திலிருந்து அதி நவீன காலம் வரை அனைத்துலக மக்களுக்கு தனது ஈடிணையற்றதும், அர்ப்பணிப்புமிக்கதுமான புனித சேவையை எவ் வித பாகுபாடுமின்றி ஆற்றி வரும் தபால்துறையினருக்காக உலக தபால் தினம் ஒக்டோபர் 9ஆம் திகதி உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

உலகின் பல்வேறு நாடுகளுக்குரிய புவியியல், அரசியல், மதம் போன்ற பல்வேறு எல் லைகள் மற்றும் தடைகள் என் பவற்றைத் தாண்டி எமது மக்களை முழு உலகுடனும் இணைக் கின்றோம். மக்கள் அவர்களு க்கேயுரிய பிரத்தியேகமானதும் மிகப் பெறுமதி வாய்ந்ததுமான தகவல்களையும் பொருட்களை யும் எம்மிடம் ஒப்படைப்பது அவற்றைப் பாதுகாப்புடனும் மிக வேகமாகவும் மிகக் கவனத்துடன் அதன் உரிமையாளர்க ளுக்கு ஒப்படைப்பார்கள் என்ற எம்மீதுள்ள பெரு நம்பிக்கையின் காரணமாகவே என்பதை நாம் அறிந்துள்ளோம். அவர் கள் எம் மீது வைத்துள்ள நம் பிக்கையை உயர் செயற்றிறமையுடனும் நேர்மையுடனும் பாதுகாப்போம். இதுவே உலக தபால் தினத்தின் தொனிப் பொருளாகும்.

இலங்கை அஞ்சல் துறை

எமது நாட்டை பொறுத்தவரையில் 1500களில் ஆண்ட போர்த்துக்கேயர் காலத்திலும் 1600 களில் ஆண்ட ஒல்லாந்தர் காலத்திலும், அஞ்சல் துறையில் போதிய வளர்ச்சிகளோ அபிவிருத்திகளோ காணப்படவில்லை. 1700களில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே அஞ்சல் துறையில் துரித வளர்ச்சியும் அபிவிருத்தியும் நவீன தொடர்பாடல் உத்திகளும் ஏற்பட்டன.

குறிப்பாக இலங்கையில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பனியினரின் தகவல் பரிமாற்ற வசதிக்காக இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான ஒரு ஒழுங்கமைக்கப்படாத தபால் சேவை கப்டன் ஏ.கென்னடி என்பவரால் ஏற்படுத்தப்பட்டது. அதன் பின்னர் 1804 தொடக்கம் 1817 ஆம் ஆண்டுவரை அஞ்சல்துறையின் தலைமைப் பொறுப்பிலிருந்த ஈ. பிளட்டமன் 1815 இல் கொழும்பு, காலி, மாத்தறை திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய ஆறு இடங்களில் அஞ்சல் அலுவலகங்களை ஆரம்பித்தார்.

1832 இல் ஆசியாவிலேயே முதல் தடவையாக கொழும்புக்கும் கண்டிக்கும் இடையிலான குதிரை வண்டித் தபால் சேவ்வ ஆரம்பிக்கப்பட்டு 1838 இல் கொழும்புக்கும் காலிக்குமிடையில் விஸ்தரிக்கப்பட்டது. 1860 இல் கொழும்புக்கும் காலிக்கும் இடையில் அவசர தபால்கள் பழக்கப்பட்ட தபால் புறாக்கள் மூலம் அனுப்பப்பட்டது. 1857 ஏப்ரல் முதலாம் திகதி 6 பென்ஸ் பெறுமதியானதும் விக்டோரியா மகாராணியாரின் தலையுருவம் கொண்டதுமான முத்திரை வெளியிடப்பட்டது. (உலகின் முதல் முத்திரை இங்கிலாந்தில் 1840 இல் ஒரு பென்ஸ் பெறுமதியில் வெளியானது)

இலங்கையில்புகையிரதச்சேவை வந்ததன் பின்னர் முதல் தடவையாக 1865 இல் கொழும்புக்கும் அம்பேபுஸ்ஸவுக்கும் இடையிலான தபால் புகையிரத சேவை உருவாக்கப்பட்டது. 1867 இல் தனியாருக்கான தபால் பை, தபால் பெட்டி சேவைகள் கொழும்பிலும் கண்டியிலும் ஆரம்பிக்கப்பட்டன.

1872 ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதியில் தான் முதன்முறையாக தபால் அட்டை வெளியானது. 1873 இல் கொழும்புக்கும் இங்கிலாந்துக்குமிடையிலான காசுக்கட்டளை சேவை ஆரம்பிக்கப்பட்டது. 1877 இல் உள்நாட்டுக் காசுக்கட்டளைச் சேவை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தும் 1877 ஏப்ரல் முதலாம் திகதி இலங்கை சர்வதேச அஞ்சல் சங்கத்தில் உறுப்பினராக இணைந்து கொண்டதிலிருந்தும் தபால்துறை துரித அபிவிருத்தி காணத் தொடங்கியது. 1880 இல் இலங்கை இந்திய காசுக்கட்டளை சேவை தொடங்கியது. 1885 மே முதலாம் திகதி அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கியும் ஆரம்பமானது. 1893 இல் இலங்கை நாணயப் பெறுமதியில் இரண்டு சதம் பெறுமதியான முத்திரை வெளியிடப்பட்டது.



1895 ஓகஸ்ட் 19 ஆம் திகதி கொழும்பு பிரதான அஞ்சல் அலுவலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1928 இல் இலங்கையின் முதலாவது வான் கடிதம் மாஸெல்ஸ் நகரத்திற்கு விமானத் தபால் வாயிலாகப் பறந்தது. 1936 இல் அஞ்சல் அறிமுக அட்டை விநியோகம் செய்யப்பட்டதும் இங்கிலாந்திலிருந்து நத்தார் தபால்கள் விமானம் மூலம் இலங்கையை அடைந்ததும் குறிப்பிடத்தக்கன. 1947 இலேயே இலங்கையர் ஒருவர் ஏ.இ.பெரேரா அஞ்சல் அதிபதியாக நியமனம் பெற்றார். இதனைத் தொடர்ந்து 1949 இல் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் வான் தபால்சேவை ஆரம்பித்தது. 1958 இல் இலங்கை போக்குவரத்துச் சபையுடன் இணைந்து [illegible] சேவை தினமும் ஓடத் [illegible] இதனால் இலங்கை மக்கள் அனைவருக்கும் தபால் சேவை தங்குதடையின்றிக் கிடைத்தது.

1967 ஜனவரி 1 இல் இலங்கை முத்திரைப் பணியகம் ஸ்தாபிக்கப்பட்டது. 1972 இல் முத்திரைகளை வெளியிடும் பணி முத்திரைப் பணியகத்திற்கு வழங்கப்பட்டது.

1975 இல் அஞ்சல் அதிபர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக வெள்ளவத்தையில் அஞ்சல் பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1979 இல் பிராந்தியங்கள் ரீதியாகத் தபால் தரம் பிரிக்கும் நிலையம் இரத்தினபுரியில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டது.

1980 ஓகஸ்ட் 15 ஆம் திகதி தபால் மற்றும் தந்திச் சேவை என இரண்டாகப் பிரிக்கப்பட்டு தந்திக்கு துரிதவசதிகள் செய்யப்பட்டன. 1981 இல் அஞ்சல் முகவர் நிலையங்கள் அனுமதிக்கப்பட்டன. மேலும் 1989 ஒக்டோபர் 1 இல் ஈ.எம்.எஸ். என் னும் விரைவுத் தபாற்சேவை ஆர ம்பிக்கப்பட்டது. 1990 ஜுலை 2 இல் ஸ்பீட் போஸ்ற் எனப்படும் அதி விரை வுத் தபாற் சேவை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது.

1992 இல் தபால் திணைக்களத்தின் மாகாண ரீதியிலான நிர்வாகப் பரவலாக்கம் ஏற்படுத்தப்பட்டதும் பிராந்திய ரீதியில் அஞ்சல் அறிமுக அட்டை வழங்கப்பட்டது. மேலும் இதே ஆண்டு தொலைநகல் (பக்ஸ்) சேவைப் பரிமாற்ற மும் தொடங்கியது. 1992 இல் இது வரை காலமும் அஞ்சலதிபர்களாக ஆண்கள் மட்டுமே கடமையாற்றிய நிலையிலிருந்து மாறி பெண்களும் அஞ்சல் அதிபர் சேவையில் நியமிக்கப்பட்டனர்.

1994 இல் கொழும்புக்கு வெளியே அஞ்சல் பொதி ஒப்படைப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. 1996 இல் தபால் தரம்பிரிப்பை மேலும் இலகுவாக்கும் பொருட்டு ஒவ்வோர் ஊருக்கும் தபால் குறியீட்டு இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1999 இல் தபால் திணைக்களம் கணனி மயமாகத் தொடங்கியது. தற்போது இலங்கை முழுவதும் 609 அஞ்சல் அலுவலகங்களும் 3440 உப தபால் நிலையங்களும் 537 முகவர் தபால் நிலையங்களும் 46 தபால்கடைகளும் இயங்கி வருகின்றன.

## முத்திரைகள்

முத்திரைகள் பிரதானமாக அஞ்சல் முத்திரைகள், இறைவரி முத்திரைகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அஞ்சல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் முத்திரைகளில் ரூ. 100.00 இற்கும் அதற்குக் குறைந்த பெறுமதியையும் கொண்ட முத்திரைகளை அஞ்சல் முத்திரைகளாக அஞ்சல் கட்டணத்தைச் செலுத்திப் பயன்படுத்தலாம்.

அஞ்சல் முத்திரைகள் மேலும் ஞாபகார்த்த முத்திரைகள், [illegible] முத்திரைகள் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஞாபகார்த்த முத்திரைகள் யாராவதொரு பிரபலமான ஒருவரையோ அல்லது ஒரு விழாவையோ, கட்டடமொன்றையோ நினைவு கூர்ந்து அல்லது ஏதாவது ஒரு விடயத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் அச்சிட்டு வெளியிடப்படும் முத்திரைகள் ஞாபகார்த்த முத்திரைகள் ஆகும்.

இங்கிலாந்து நாட்டிலேயே முத்திரை முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. முத்திரை அறிமுகப்படுத்தப்பட முன்னர் கடிதங்கள் விநியோகிக்கப்படும் வேளையில் விலாசதாரரிடமிருந்தே அஞ்சற் கட்டணம் அறவிடப்பட்டது. இந் நடைமுறையினால் கட்டணம் அறவிடுவதில் பாரிய சிக்கல்கள் தோன்றியதால் சேர். றோலண்ட் ஹில் அஞ்சலிடும் போதே அஞ்சல் கட்டடத்தினை முற்கூட்டி அறவிடும் முறையினை கொண்டு வந்தார். இதற்காக கட்டணம் குறிக்கப்பட்ட முத்திரைகள் சேர்.றோலண்ட் ஹில்டினால் 1840 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி அறிமுகம் செய்யப்பட்டது. இம்முத்திரை பிரித்தானிய மகாராணியின் தலை பொறிக்கப்பட்ட ஒரு பென்னி பெறுமதியுடைய கறுப்பு நிற முத்திரையானதால் இதனை பென்னி பிளேக் என அழைப்பர். இலங்கையின் 6 பென்ஸ் பெறுமதியுடைய விக்டோறியா மகாராணியின் தலை பொறிக்கப்பட்ட முத்திரை 1857 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதன் முதலில் வெளியிடப்பட்டது. ஆனால் இலங்கை நாணயத்தில் ரூபா சதப் பெறுமதியான முத்திரை 1872 இற்குப் பின்னரே வெளியிடப்பட்டது. முத்திரை வெளியீட்டில் ஒரு மைல் கல்லாக 2002 மார்ச் மாதம் 15 ஆம் திகதி அரச வர்த்தமானி வெளியீட்டின் 200 ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக இலங்கை அரசாங்க அச்சககூட்டுத்தாபனத்தால் எமது நாட்டிலேயே முதன் முதலில் முத்திரை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

முத்திரைகளை வடிவமைத்து அச்சடிக்கும் அதிகாரம் தபால் திணைக்களத்திற்கே உள்ளது. இருப்பினும் இவ்வாறு அச்சடிக்கும் முத்திரைகள் யாவும் இறைவரி திணைக்களத்திற்கே சொந்தமானதாகும்.

அஞ்சல் திணைக்களத்தின் வழமையான சேவைகளால் அஞ்சல் முத்திரை இடப்பட்ட பொருட்கள் , எழுது கருவிகள், தொலைபேசி அழைப்புகள், தொகை அஞ்சல் பொருட்கள் பாரம் எடுத்தல், சமூக சேவைக் கொடுப்பனவுகள் (சிறுநீரக நோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற நோய்கள் வறியவர்களுக்கான ஆதார பணக் கொடுப்பனவுகள் ), விவசாய , மீன்பிடியாளர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு பரீட்சைக் கட்டணம் , காசுக் கட்டளைகள், வாகனத்தண்டப்பணம் செலுத்துதல், விரைவு தபாற் சேவை, தபால் தேசிய சேமிப்பு வங்கிச் சேவைகள், தபாற் பெட்டி மற்றும் தபால்பை சேவைகள், தந்திச் சேவைகள், தொலைநகல், போட்டோப்பிரதிகள் பதிவஞ்சல் மற்றும் சாதாரண கடிதச் சேவைகள், உள்நாட்டு, வெளிநாட்டு பொதிச் சேவைகள், காப்புறுதி கடிதச் சேவைகள், அஞ்சல் அறிமுக அட்டை, புதினப் பத்திரிகைகள் மற்றும் பதிவு செய்தல் என்பவற்றுடன் நவீன காலத்திற்கு வேண்டிய புதிய பல சேவைகளான மின்சாரக் கட்டணக் கொடுப்பனவு, மொபிடெல் தொலைபேசிக் கட்டணங்கள் இலங்கை தொலைத் தொடர்பு தொலைபேசி கட்டணங்கள், குடிநீர்க் கட்டணங்கள் மற்றும் செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் ஆயுட்காப்புறுதி கட்டணங்கள், மூன்றாம் தரப்பு வாகன காப்பீடுகள் போன்ற முகவர் சேவைகளும் மேலதிக தரகுப் பணங்கள் எதுவுமின்றி வாடிக்கை யாளர்களுக்கு ஆற்றப்பட்டு வரு வதுடன் உடனுக்குடன் கணக்கில் வரவும் வைக்கப்படும்.

மேலும் தேசிய சேமிப்பு வங்கியானது இலங்கை அஞ்சலுடன் ஆரம்பகாலம் முதலே இணைந்து செயற்படும் வங்கிச் சேவையாகும். இவ்வங்கிச் சேவை மூலமாக சாதாரண சேமிப்பு சிறுவர்களுக்கான, மகளிருக்கான சேமிப்புக்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் போன்றவற்றை எது வித சிரமமுமின்றி மேற்கொள்ள முடிவதோடு ஏனைய வங்கிகளைப் போல் அல்லாது இலங்கையில் அதிகூடிய வட்டி வீதமும் வழங்கப்படும் ஓர் அரச வங்கிச் சேவையாகும்.

தற்போது கணனி மயப்படுத்தப்பட்ட சேவையாக உள்ளமையால் தங்களுக்கு கையில் கிடைக்கும் சிறுதொகைப் பணத்தைக் கூட இலங்கையின் எப்பாகத்திலும் அருகிலுள்ள அஞ் சல் அலுவலகங்கள் மூலமாக வைப்பிலிட்டு சேமித்து கொள்ள முடிவதோடு கேட்டவுடனான மீளப் பெறுதல் வசதியையும் சிரமமின்றி வழங்குகின்றது.

அத்துடன் வெளி நாட்டில் உள்ள உறவுகள் அனுப்பும் பணத்தினையும் தேசிய சேமிப்பு வங்கி வெளிநாட்டுபணப்பரிமாற்றசேவையினூடாக மிக இலகுவாக பெற்றுக் கொள்ளும் வசதியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் மிக மிக குறைந்த வட்டி வீதத்தில் குழுக் கடன் திட்டத்தினையும் அறிமுகப்படுத்தி உள்ளது.

மேலும் தற்போது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி தங்கள் வீட்டு வாசல் வரை வரும் அஞ்சலர்கள் மூலமாகவே பட்டியல் கொடுப்பனவுகளை இலகுவாக மேற்கொள்ள முடிவதால் எமது நேர விரயமும் தவிர்க்கப்படுகின்றது. ஒப்பீட்டளவில் முன்னைய காலத்தை விட கடிதப் பயன்பாடு தற்போது குறைவாக இருப்பினும் கூட தற்போது பல புதிய புதிய சேவைகளை மேலதிக கட்டணங்கள் இன்றி அறிமுகப்படுத்தியுள்ளமையாலும் மேலும் அனைத்துத் தர மக்களும் பயன் பெற ஏற்றவாறாக இலகுவான வாடிக்கையாளர் சேவை வழங்கி வருகின்றமையாலும் அஞ்சல் சேவை என்பது ஓர் அத்தியாவசிய தேவையாகவே இன்றும் மக்களிடத்தில் காணப்படுகின்றது.

க.நிருத்தியன்
தரம்-07
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டலோனியாவின் தனிநாட்டுக்கான அறிவிப்பால் எந்தப் பயனும் கிடைக்காது

## ஸ்பெயின் பிரதமர் கூறுகிறார்



காட்டலோனியா தனது சுதந்திரம் குறித்து விடுக்கும் எந்த ஒரு பிரகடனத்துக்கும் எந்த ஒரு பயனும் இருக்காது என்று ஸ்பெயின் பிரதமர் மரியானோ ரஜாய் எச்சரித்துள்ளார்.

மேலும் , காட்டலோனியா பிரதேசத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் தன்னாட்சி உரிமையை இடைநிறுத்தப்படும் சாத்தியக்கூறையும் தான் நிராகரிக்கவில்லை என்றும் அவர் தெ்ரிவித்தார்.

"எல் பெய்ஸ்" செய்தித்தாளுக்கு வழங்கிய பேட்டியொன்றில், இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண எடுக்கப்படும் எந்த ஒரு மத்யஸ்த முயற்சியையும் ரஜாய் நிராகரித்தார்.

முன்னதாக, ஆயிரக்கணக்கான மக்கள், ஸ்பெயினில் ஒற்றுமை கோரி பேரணி நடத்தினர்.

கடந்த ஞாயிறு அன்று காட்டலோன் சுந்திரத்திற்காக நடந்த பிரச்சினைக்குரிய மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பிற்கு பதிலளிக்கும் வகையில் இது நடந்தது.

செழிப்பான வட-கிழக்கு பகுதியான காட்டலோனியாவில், உள்ள 23 இலட்சம் மக்களில், வாக்குப் பதிவில் பங்கேற்ற 90 சதவிகிதம் பேர், சுதந்திரம் வேண்டும் என்றே வாக்களித்துள்ளனர்.

இந்த வாக்கெடுப்பில் 43 சதவிகித வாக்குகள் பதிவாகின.

இந்த தேர்தலில் பல முறைகேடுகள் நடந்ததாகவும், சில வாக்குப் பெட்டிகள் ஸ்பெயின் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வாக்குப்பதிவிற்கு ஸ்பெயின் நீதிமன்ற அளித்திருந்த தடையினால், வாக்களிக்க வருபவர்களை பொலிஸார் கலைக்க முயன்ற போது, கிட்டத்தட்ட 900 பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளது.

இதில் 33 பொலிஸாரும் காயமடைந்துள்ளனர்.

"சுதந்திரத்துக்கான எந்த ஒரு பிரகடனமும் எங்கும் இட்டுச்செல்லாது என்பதை அரசு உறுதி செய்யும்" , என்று "எல் பெய்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ராஜாய் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமையன்று ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் நடந்த பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒற்றுமையான ஸ்பெயினுக்காக குரலெழுப்பினர்.

காட்டலோன் நகரான பார்சிலோனா உள்ளிட்ட நகரங்களில் நடந்த ஆர்ப்பாட்டங்களில் அரசியல் தலைவர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை நடைபெறவேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

வெள்ளிக்கிழமை ஆடையணிந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசியல்வாதிகளை விட மிகவும் மேன்மையானது ஸ்பெயின் நாடு. வாருங்கள் பேசுவோம் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தியிருந்தனர்.

தன்னாட்சி பெற்ற ஒரு பிரதேசத்தின் நிர்வாகத்தில் தலையிட தேசிய நாடாளுமன்றத்தை அனுமதிக்கும் ஸ்பெயினின் அரசியல் சட்ட 155ஆவது பிரிவைப் பிரயோகிக்க அவர் தயாராக இருக்கிறாரா என்று கேட்டதற்கு, சட்டத்துக்குட்பட்ட எந்த வழிமுறையையும் பயன்படுத்துவதை தான் நிராகரிக்கவேயில்லை" என்றார் ரஜாய்.

காட்டலோனியாவில் கருத்தறியும் வாக்கெடுப்பு நடக்கும் முன்பாக, அங்கு நிலை நிறுத்தப்பட்ட கூடுதல் பொலிஸாரை, இந்த நெருக்கடி சூழல் தீரும்வரை அங்கேயே இருத்தி வைக்க தான் திட்ட மிட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.



அதிகரித்துவரும் இந்த அரசியல் நெருக்கடி காரணமாக தேசியத் தேர்தல்களை முன்கூட்டியே நடத்த தான் உத்தரவிடப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்பெயின் நீதிமன்றம், திங்களன்று நடைபெறுவதாக இருந்த, காட்டலோன் நாடாளுமன்ற கூட்டத்திற்கு தடை விதித்துள்ளதை தொடர்ந்து, காட்டலோன் ஜனாதிபதி கார்லஸ் பூஜ்டியமோனின் உரை, செவ்வாயன்று, உள்ளூர் நேரப்படி மாலை 6 மணிக்கு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த முறை காட்டலோன் நாடாளுமன்றம் கூடும் போது, ஒருதலைபட்சமாக, அது சுதந்திரத்தை அறிவிக்கும் என்ற ஊகம் உள்ளது.

இந்நிலையில், காட்டலோனியாவின் முன்னாள் தலைவரான அர்தர் மாஸ் பினான்ஷியல் டைம்ஸ் பத்திரிகையிடம் கூறுகையில்,

காட்டலோனியா, தனியாக பிரிந்து செல்வதற்கான உரிமையை பெற்றுவிட்டது என்றாலும் கூட, அது இன்னும் உண்மையான சுதந்திரத்திற்கு தயாராகவில்லை என்றார். (8)

# அமெ.படைகளை ஐ.எஸ்ஸிற்கு இணையாக அறிவிப்போம்

## ஈரான் அரசாங்கம் மிரட்டல்

(டெஹ்றான்)

ஈரான் இராணுவத்தை தீவிரவாதப் படை என அறிவித்த அமெரிக்காவுக்கு பதிலடி தரும் வகையில் அமெரிக்க படைகளை ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு இணையாக அறிவிப்போம் என ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

சர்வதேச அணு ஆயுத பரவல் ஒப்பந்தத்தை மீறிய வகையில் அணு ஆயுதங்களையும், ஏவுகணைகளையும் பரிசோதித்து வரும் ஈரான் நாட்டு இராணுவ த்தை தீவிரவாதிகள் என சமீபத்தில் அமெரிக்கா அறிவித்தது.

மேலும், ஈரான் மீது புதிய தடைகளை விதிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆலோசித்து வருவதாகவும் கூறப்படுகிறது.



இந்நிலையில், ஈரான் இராணுவத்தை தீவிரவாதப்படை என அறிவித்த அமெரிக்காவுக்கு பதிலடி தரும் வகையில் அமெரிக்க படைகளை ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு இணையாக அறிவிப்போம் என ஈரான் இராணுவ தளபதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, ஈரான் ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் எங்கள் மீது புதிய தடைகள் விதிக்கப்பட்டால் அமெரிக்காவின் இராணுவ முகாம்களை எங்களது ஏவுகணைகளின் இலக்கான 2 ஆயிரம் கிலோமீற்றர் தூரத்தை கடந்து இடம் மாற்ற வேண்டியதாகிவிடும்.

எங்கள் நாட்டு இராணுவத்தை தீவிரவாதிகள் என அமெரிக்கா கருதினால், எங்கள் படைகளும் மத்திய கிழக்கு பகுதியில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு இணையாக அமெரிக்க இராணுவத்தை கருத தொடங்கும் என அந்நாட்டின் இராணுவ தளபதி முஹம்மது அலி ஜாப்ரி கூறியதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (8)

# சவுதியில் அதிகரிக்கும் தீவிரவாத அச்சுறுத்தல்

## அரண்மனைப் பாதுகாவலர்கள் இருவர் பலி

(ஜெட்டா)

சவுதிஅரேபியா அரண்மனையில் 2 பாதுகாவலர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். முடிவில் அரண்மனைக்குள் புகுந்த மர்ம வாலிபரும் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டான்.

சவுதி அரேபியாவில் ஜெட்டா நகரில் அரண்மனை உள்ளது. இங்கு மன்னர் சல்மான் மற்றும் அவரது குடும்பத்தினர் தங்கியுள்ளனர். அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந் நிலையில் நேற்று முன்தினம் பாதுகாப்பையும் மீறி மர்ம வாலிபர் ஒருவர் அரண்மனைக்குள் புகுந்தான். அதை அவதானித்த பாதுகாவலர்கள் அந்த நபரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் 2 தரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்தது. இதற்கிடையே மர்ம வாலிபர் சுட்டதில் பாதுகாவலர்கள் 2 பேர் குண்டு பாய்ந்து உயிரிழந்தனர். 3 பேர் காயம் அடைந்தனர்.

முடிவில் அரண்மனைக்குள் புகுந்த மர்ம வாலிபரும் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டான். அவனிடம் இருந்து 3 வெடிகுண்டுகள் மற்றும் துப்பாக்கியும் பறிமுதல் செய்யப்பட்டது.

28 வயது நிரம்பிய சவுதி அரேபியாவை சேர்ந்த இவன் சவுதி இராணுவத்தில் பணி புரிந்தவன் என விசாரணையில் தெரிய வந்தது. ஆனாலும் எதற்காக அரண்மனையில் புகுந்தான் என எதுவும் தெரியவில்லை.

சவுதி அரேபியாவில் 2014-ம் ஆண்டில் இருந்து ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஷியா பிரிவினர் மீதும், இராணுவத்தினர் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இத்தாக்குதலையும் அவர்கள் தூண்டுதலின் பேரில் நடத்தியிருக்க வேண்டும் என சவுதி அரேபிய அரசு கருதுகிறது.

முன்னதாக தலைநகர் ரியாத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் 3 மறைவிடங்களில் பொலிஸார் தாக்குதல் நடத்தினார்கள். அப்போது இரு தரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்தது.

சவுதி அரேபியாவில் தீவிரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதால் அங்கு அமெரிக்கர்கள் பாதுகாப்பான முறையில் நடமாடும் படி தன்நாட்டு மக்களுக்கு அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாடும் பறவை ...இறந்தது போல் ஏன் நடித்தது?

நினைவில் இல்லை.

மரத்தில் இருந்து அந்தப் பறவை இறந்த காட்சி மட்டுமே திரும்பத் திரும்ப வந்து அவனை அலைக்கழித்தது. சாப்பாடு இறங்கவில்லை. கப்பலில் உடன் வந்தவர் களுடன் பேசக்கூடப் பிடிக்க வில்லை. ஒருவழியாக வீடு வந்து சேர்ந்தான்.

மனைவி, மகள்கள், பிள் ளைகள் அவன் கொண்டு வந்த பரிசுப் பொருள்களைப் பார்த்து பிரமித்துப் போனார்கள்.

அவனைப் பாராட்டித்தள்ளி னார்கள். அவன் எல்லாவற்றுக் கும் லேசாகத் தலையசைத்து, புன்னகைத் தானே தவிர, பதில் பேசவில்லை. தன் வளர்ப்புப் பறவையை எப்படிப் பார்க்கப் போகிறோம், அதற்கு எப்படி நடந்ததைச் சொல்வது என்கிற வேதனை அவனை வதைத்துக் கொண்டிருந்தது.

அடுத்த நாள் ஒருவழியாக, தன்னைத் தேற்றிக்கொண்டு அந்தப் பறவையிடம் போனான். அது, கூண்டின் மேலே இருந்த சிறிய மரக்கட்டை ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்தது. வியாபாரி, தயங்கித் தயங்கி, பறவைகளைப் பார்த்ததையும் நடந்ததையும் சொன்னான். அவ்வளவுதான் கேட்டுக்கொண்டிருந்த பற வையின் உடல் நடுங்கியது அது ஊஞ்சலில் இருந்து ஹசொத்' தென்று கீழே கூண்டுக்குள் விழுந்தது. அசைவற்று அப்படியே கிடந்தது. அவன் பதறிப் போனான். அவசர அவசரமாகக் கூண்டைத் திறந்தான். நடுங்கும் கரங்களால் அந்தப் பறவையைத் தூக்கினான். உள்ளங்கைகளில் வைத்துக்கொண்டு தேம்பி அழ ஆரம்பித்தான். திடீரென்று அது நடந்தது அந்தப் பறவை சட் டென்று தன் சிறகுகளை அசை த்து, அவன் கைகளில் இருந்து பறந்துபோய் அருகில் இருந்த ஒரு மரத்தின் மேல் அமர்ந்து கொண டது.



பறவை தன்னை ஏமாற்றி விட்டது என்பதை அவன் புரிந்து கொண்டான். பிறகு ஒருவாறாகத் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு அதனிடம் கேட்டான் "இது என்ன தந்திரம்? உனக்கு நான் என்ன குறை வைத்தேன்? இறந்தது போல் ஏன் நடித்தாய்? சொல்!"

"நீ பார்த்தாயே என் உறவுக் காரப் பறவை அது என் அழகு, வாழ்க்கை மொத்தமும் இந்தக் கூண்டுக்குள் சிறைவைக்கப் பட்டிருப்பதை எனக்கு உணர்த்தி விட்டது. என் குரலுக்கு மயங்கி னாய். பாட வைத்தாய். நீ பாடச் சொல்வதும், அதற்கு இணங்கி நான் பாடுவதும்கூட எனக்குப் பிடித்துத்தான் இருந்தது. ஆனால், எந்தப் பறவையும் கூண்டு வாழ்க்கையை விரும்பு வதில்லை. அந்த வாழ்க்கை எனக்கு இனி வேண்டாம். பறத் தல்தான் என் இயல்பு, எனக்கு வேண்டியது சுதந்திரம்"

அந்தப் பறவை வானில் கிளம்பி, சிறகசைத்துப் பறந்து அவன் கண்ணில் இருந்து மறைந்தது. (முற்றும்)




- 1003 -லெயிஃப் எரிக்சன் கனடாவில் லான்ஸ் ஒக்ஸ் மெடோஸ் என்ற இடத்தில் தரையிறங்கி, அமெரிக்காவில் காலடி வைத்த முதலாவது ஐரோப்பியர் ஆனார்.
- 1582 - கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப் படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம் பெறவில்லை.
- 1604 - சுப்பர்நோவா 1604 பால் வெளியில் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1760 - ஏழாண்டுப் போர்: ரஷ்யா பேர்லின் நகரைப் பிடித்தது.
- 1771 -டச்சு சரக்குக் கப்பல் பின்லாந்துக் கடற்ரையில் மூழ்கியது.
- 1799 - லூட்டின் என்ற கப்பல் நெதர்லாந்தில் 240 பேருடனும் +1,200,000 பெறுமதியான பொருட்களுடனும் மூழ்கியது.
- 1804 - டாஸ்மானியா தலைநகர் ஹோபார்ட் நகரம் அமைக்கப்பட்டது.
- 1806 -பிரஷ்யா பிரான்ஸ் மீது போர் தொடுத்தது.
- 1820 - கயாக்கில் ஸ்பெயினிடம் இருந்து விடு தலையை அறிவித்தது.
- 1831 - கிரேக்கத் தலைவர் இயோனிஸ் கப்போடி ஸ்ட்ரியா படுகொலை செய்யப்பட்டார்.
- 1835 - கொழும்பு றோயல் கல்லூரி ஆரம்பிக் கப்பட்டது.
- 1854 - ரஷ்யாவில் செவஸ்தபோல் மீதான தாக்குதலை பிரித்தானியா, பிரான்ஸ், மற்றும் துருக்கியப் படைகள் ஆரம்பித்தன.
- 1888 - வோஷிங்டன் நினைவுச் சின்னம், அக் காலத்தில் உலகின் உயரமான கட்டடம், வோஷிங்டன் டிசியில் பொதுமக்கள் பார் வைக்குத் திறக்கப்பட்டது.
- 1910 - மாறுவேடத்தில் உலகப் பயணம் மேற் கொண்ட பின்னர் வ. வே. சு. ஐயர் புதுச்சேரி திரும்பினார்.
- 1914 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தின் ஆண்ட்வேர்ப் நகரம் ஜேர்மனியிடம் வீழ் ந்தது.
- 1934 -யூகோஸ்லாவியாவின் மன்னன் முதலாம் அலெக்சாண்டர் கொல்லப்பட்டான்.
- 1962 - உகாண்டா பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1963 - வடகிழக்கு இத்தாலியில் இடம்பெற்ற நிலச்சரிவில் 2,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1970 - கம்போடியாவில் கெமர் குடியரசு அறி விக்கப்பட்டது.
- 1981 - பிரான்சில் மரணதண்டனை நிறுத்தப்பட்டது.
- 1987 - யாழ்ப்பாணத்தில் நிதர்சனம் தொலைக் காட்சி நிறுவனம் மற்றும் முரசொலி நாளிதழ் கட்டடங்களை இந்திய இராணுவத்தினர் தகர்த்தனர்.
- 1989 -ரஷ்யாவின் வரோனியொஷ் அருகில் ஒரு பறக்கும் தட்டு இறங்கியதாக சோவியத் ஒன்றிய செய்தித் தாபனம் அறிவித்தது.
- 2001 - இந்தியாவில் பாவேந்தர் பாரதிதாசனுக்கு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.
- 2004 -ஆப்கானிஸ்தானில் முதற்தடவையாக சனநாயகத் தேர்தல் இடம்பெற்றது.
- 2006 - வட கொரியா தனது முதலாவது அணு வாயுதச் சோதனையை வெற்றிகரமாக நிகழ்த்தியது.

பிறப்புகள்

- 1876 -தர்மானந்த தாமோதர் கோசாம்பி, இந்தியப் பௌத்த பேரறிஞர் (இ. 1947)
- 1879 - மேக்ஸ் வோன் உலோ, நோபல் பரிசு பெற்ற செருமானிய இயற்பியலாளர் (இ. 1960)
- 1911 - பி. எஸ். வீரப்பா, தமிழ்த் திரைப்பட நடிகர் (இ. 1998)
- 1924 - இம்மானுவேல் சேகரன், இந்திய தலித் தலைவர் (இ. 1957)
- 1933 - சு. சுசீந்திரராஜா, இலங்கை மொழி யியலாளர்
- 1940 - ஜான் லெனன்,ஆங்கிலேயப்பாடகர் (இ. 1980)
- 1945 - விஜய குமாரணதுங்க, இலங்கை நடிகர், அரசியல்வாதி (இ. 1988)
- 1950 - ஜோடி வில்லியம்ஸ், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1959 - போரிசு நெம்த்சோவ், உருசிய அரசி யல்வாதி (இ. 2015)
- 1966 -டேவிட் கேமரன், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர்
- 1968 - டிராய் டேவிஸ், அமெரிக்கக் குற்றவாளி (இ. 2011)
- 1968 - அன்புமணி ராமதாஸ், தமிழக அரசி யல்வாதி

இறப்புகள்

- 2003 - ஏ. ரி. பொன்னுத்துரை, இலங்கைத் தமிழ் நாடகக் கலைஞர் (பி. 1928)
- 2004 - ஜாக்கஸ் தெரிதா, அல்சீரிய-பிரெஞ்சு மெய்யியலாளர் (பி. 1930)
- 2006 - கன்சிராம், இந்திய அரசியல்வாதி (பி. 1934)
- 2010- எஸ். எஸ். சந்திரன், தமிழ்த் திரைப்பட நடிகர், அரசியல்வாதி
- 2015 - என். ரமணி, புல்லாங்குழல் கலைஞர் (பி. 1934)
- 2015 - ப. ஆப்டீன், ஈழத்து எழுத்தாளர் (பி. 1937)

சிறப்பு நாள்

- விடுதலை நாள் (உகாண்டா, 1962)
- விடுதலை நாள் (ஈக்குவடோர், 1820)
- உலக அஞ்சல் நாள்




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 130 | 160 | 140 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 95 | 110 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 420 | 500 | 400 | 600 | 400 |
| தக்காளி | 180 | 250 | 140 | 200 | 180 | 160 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 | 70 | 80 | 60 | 60 |
| கோவா | 150 | 160 | 90 | 140 | 160 | 160 | 120 |
| கரட் | 100 | 200 | 80 | 180 | 200 | 160 | 80 |
| பூசணி | 60 | 40 | 30 | 50 | 40 | 60 | 40 |
| புடோல் | 120 | 140 | 60 | 100 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 100 | 80 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 260 | 300 | 230 | 300 | 250 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 130 | 150 | 75 | 120 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 300 | 500 | 230 | 400 | 280 | 400 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 60 | 120 | 80 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 150 | 65 | 80 | 100 | 100 | 90 |
| பயற்றங்காய் | 140 | 100 | 90 | 120 | 100 | 140 | 140 |
| லீக்ஸ் | 150 | 250 | 150 | 200 | 200 | 200 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 70 | 100 | 80 | 120 | 80 |
| கறிமிளகாய் | 200 | 300 | 150 | 200 | 200 | 240 | 160 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 120 | 200 | 160 | 200 | 200 |
| போஞ்சி | 200 | 250 | 150 | 200 | 180 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 | 120 | 140 | 140 | 130 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 30 | 40 | 50 | 50 | 35 |
| தேசிக்காய் | 280 | 200 | 220 | 300 | 250 | 400 | 260 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70-100 | 80 | 80 | 75 | 60-100 | 80 |
| இராசவள்ளி | 300 | 500 | 250 | - | - | 400 | 280 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 200 | 200 | 240 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 40 | 80 | 80 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 | 20 | 25 | 25 |
| ஈரப்பலா | 80 | 60 | 30 | 60 | - | 60 | 70 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனசாட்சிக்கு ஒப்பான கடமையைச் செய்தாலும் சூழ்நிலையை அனுசரித்து செய்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடக்கின் முதலமைச்சருடன் சம்பந்தர் இணைய வேண்டும்

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் முன்னேற்பாடாக வெளிவந்த இடைக்கால வரைபில் தமிழ் மக்களுக்குத் தேவையான அத்தனை உரிமைகளும் அதிகாரங்களும் உண்டு என்ற கருத்து நிலையை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கொண்டிருந்தார். இதுபற்றி அவர் பல இடங்களில் கூறியும் உள்ளார்.

அவரைப் பொறுத்தவரை அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலுக்கு வருமாக இருந்தால், இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட்டு விடும் என்பதாக அவரின் நிலைப்பாடு உள்ளது.

சமஷ்டி என்ற சொற்பதம் வெளிப்படையாக இல்லாவிட்டாலும் சமஷ்டிக்குரிய அதிகாரங்களும் உரிமைகளும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் உள்ளது என்பது அவரின் நம்பிக்கை.

இந்நிலையில் இடைக்கால வரைபில் தமிழ் மக்களுக்கான அதிகாரங்களும் உரிமைகளும் இல்லை. தொடர்ந்தும் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராட வேண்டியவர்களாக உள்ளனர் என்று வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கருத்துரைக்க அதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவையும் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகமும் இடைக்கால வரைபை நிராகரித்து அறிக்கை விடுத்தன.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் இடைக்கால வரைபில் ஐயம் வெளியிடத் தலைப்பட்டுள்ளமையை உணர முடிகின்றது.

. அண்மையில் மன்னார் மறை மாவட்ட ஆயரைச் சந்தித்து தமிழ் மக்களின் உரிமைகள் விடயத்தில் நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று தெரிவித்திருந்தார்.

இவ்வாறு அவர் மன்னார் ஆயரிடம் தெரிவித்த கருத்தை இந்து மதத் தலைவர்களிடம் தெரிவிக்காதது ஏன்? இரா.சம்பந்தர் இந்து சமயத்தை ஓரங்கட்டுகிறாரா என்ற கேள்விகள் இந்து மத அமைப்புக்களிடம் எழுந்தன.

அதேநேரம் மன்னார் மறை மாவட்ட ஆயரிடம் கூறிய கருத்தை யாழ்.மறை மாவட்ட ஆயரிடம் கூறியிருக்க வேண்டும்ல்லவா? அதைச் சம்பந்தர் செய்யாதது ஏன்? என்ற வாதங்களும் அரசியல் பரப்பில் எழுந்ததுண்டு.

எதுஎவ்வாறாக இருப்பினும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கடந்த சில நாட்களாகக் கூறிவரும் கருத்துக்கள் நியாயமானவையாக இருக்கின்றன.

அதிலும் பிரிட்டிஷ் அமைச்சருடனான சந்திப்பின் போது இரா.சம்பந்தர் அவர்கள் கூறிய கருத்துக்கள் ஏற்புடையவை – நியாயமானவை.

ஆக, அடிப்படையில் தமிழ் மக்களின் உரிமை மற்றும் அதிகார விடயங்களில் இரா. சம்பந்தரின் நிலைப்பாடு சரியாக இருக்கின்ற போதிலும் இடையிடையே யாரோ மூளை சலவை செய்து குழப்பி விடுகின்றனர்.

இவ்வாறான குழப்பங்களில் இருந்து அவர் விடுபட்டு தமிழ் மக்களுக்கு உரிய தீர்வைப் பெற முயற்சி செய்ய வேண்டுமாக இருந்தால்,

அதற்கான ஒரே வழி வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுடன் இரா. சம்பந்தர் இணைந்து செயற்பட வேண்டும்.

# பருத்தித்துறை - வவுனியா பேருந்தில் மாட்டிறைச்சி கடத்தல்

பருத்தித்துறையில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றில் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்ட மாடுகளின் இறைச்சியினை கடத்திச் சென்றவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பேருந்து சாரதி உட்பட 3 பேரைக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

பருத்தித்துறையில் இருந்து வவுனியாவிற்கு தனியார் பேருந்து மூலம் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்ட மாடுகளின் இறைச்சிகள் கடத்தப்படுவதாக 'வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து ஏ9 வீதியில் உள்ள தாண்டிக்குளம் புகையிரத நிலையத்திற்கு அண்மையாக விசேட வீதிப் பரிசோதனை நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டனர்.

இதன்போது, பருத்தித்துறையில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த பேருந்தினை தடுத்து நிறுத்தி சோதனையிட்டபோது பேருந்தின் பின்புறமாக உள்ள பொதிகள் வைக்கும் பெட்டகத்தில் 2 பைகளில் நுட்பமான முறையில் பொதியிடப்பட்ட நிலையில் 87 கிலோவும் 850 கிராம் நிறையுடைய மாட்டிறைச்சியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதனையடுத்து, பேருந்தை வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று தடுத்து வைத்துள்ளதுடன், மாட்டிறைச்சியைக் கடத்தியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அதன் சாரதி உட்பட 21, 27, 35 ஆகிய வயதுடைய 3 பேரைக கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் வவுனியா பொலிஸ் நிலையத் வைக்கப்பட்டுள்ளதுடன், கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேகநபர்களை இன்று திங்கட்கிழமை காலை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வவுனியா பொலிஸ நிலையத் தகவலில் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-15,250)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுககாக செவ்வாய்க்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில கொல்லங்கலட்டி, வித்தகபுரம், மாவைகலட்டி, கீரிமலை, கூவில், நல்லிணக்கபுரம், கீரிமலை சந்தி கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**மெட்டி அணிவிப்பது எதற்காக?**

மணமகளானவள் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவள். எங்கள் குடும்பம் தழைக்க தெய்வத்தால் அனுப்பப்பட்டவள். இவளுக்கு எவ்விதத்திலும் தொல்லை தராதீர்கள் என்று பிற குடும்பங்களுக்கும் பிற ஆட்வர்களுக்கும் உணர்த்தவே. (தொடரும்)




குமுத முகத்தில் குறும்பான புன்னகை மிளிர அம்மா உண்மை என்னவென்று தெரியாமல் நீ பேசுகிறாய். சொல்கிறேன் கேள். துவாபர யுகத்தில் நான் கிருஷ்ணன். நீ என்னனை வளர்த்த அன்னை யசோதை.

என்னை மணக் கோலத்தில் காண முடியா மனவருத்தம் உனக்கு இருந்தது. அந்த வருத்தத்தைப் போக்க கலியுகத்தில் வகுளா தேவியாக நீ பிறப்பெடுக்கப் போவதைச் சொன்னேன். நீ ஶ்ரீநிவாசன் எனப்பெயரிட்டு என்னைச் சீராட்டுவாய் என்றும் சொன்னேன். (தொடரும்)

## SHANTHIHAM
Association for Health & Counselling

**உலக உளநல நாள்- ஒக்டோபர் 10**

மன அழுத்தத்தை குறைக்க எல்லோராலும் பயிற்சி செய்யப்படக்கூடிய ஆதாரபூர்வமான வழிமுறைகள்

1.எளியமுறை யோகாசனம்: பயிற்றுநர்களிடம் பழகுவது சிறந்தது.

2.சுவாசப் பயிற்சிகள்:
சுகப் பிரணாயாமம்
நாடிசுத்தி பிரணாயாமம்

3.உணர்வுகளுடனான தியானம்:
நான் இப்பொழுது இங்கே இருக்கிறேன்
என் தலையிலிருந்து கால்வரை ஒவ்வொரு
உறுப்பும் நன்றாயிருக்கின்றன
சமாதானமான சந்தமாக இருக்கின்றன

## உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

மார்பக புற்றுநோய் தடுத்திட முடியாததொன்று. எனவே இதனை ஆரம்ப நிலையில் கண்டறியும் சோதனைகளைச் செய்வதன்மூலம் அதன் ஆரம்ப நிலையில் கண்டறிந்து கொள்ள முடியும்.

தகவல் : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.
யாழ்ப்பாணம் மாநகர சபை

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மிருகம்,மனிதன், மாமனிதன்



புலன்கள் மூலமாகப் பொருட்களைப் பார்ப்பதும், அப்படி நாம் பார்க்கும் போது நமது ஜீவகாந்த சக்தி செலவு ஆவதால் இன்பமோ, துன்பமோ, அமைதியோ, பேரின்பமோ வருவதும், புலன்கள் மூலமாக வரக்கூடிய வாழ்க்கை. உலகியல் வாழ்க்கை. அதற்கு மேலாக உண்மையை உணர்ந்து, இயற்கையை உணர்ந்து, அதற்குத் தக்கவாறு அருள்வாழ்வு வாழ வழி வகுத்துக் கொண்டு வாழக்கூடிய ஒரு பேராற்றலும் மனிதனிடத்தில் இருக்கிறது. ஆனால், மற்ற ஜீவராசிகளிடமும் இந்த அறிவு இல்லையா என்று பார்த்தால் இருக்கிறது. ஆனால் அந்த அறிவைச் செயற்படுத்தக் கூடிய வாய்ப்பே அவற்றுக்கு இல்லை.

பசி எடுத்தால் சாப்பிடவேண்டும். ஆனால், சாப்பாட்டிற்கு உணவு உற்பத்தி செய்ய எந்த ஜீவனாலாவது முடியுமா? உலகத்திலே, மனிதன் ஒருவனுக்குத் தான் தனக்கு வேண்டிய உணவைத் தானே உற்பத்தி செய்து சாப்பிடக்கூடிய திறமை உள்ளது. மற்ற ஜீவன்களுக்கு இல்லை. அவை என்ன செய்கின்றன?

"மற்றொரு ஜீவன் தன் வாய்க்குள் போகக் கூடியதாக இருக்க வேண்டும். அதற்கும் மேலாகத் தன்னால் கொன்று அதைச் சாப்பிடக்கூடிய, தன் வலிவுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்" இப்படித்தான் அததற்கு உரிய உணவை எல்லா ஜீவனும் தேடிக் கொள்கின்றன. உலகத்திலுள்ள எந்த ஜீவன் ஆனாலும் சரி, ஓரறிவான மரம், செடி, கொடி தவிர இரண்டாவது அறிவாகத் தோன்றி புழுவிலிருந்து மற்ற பூச்சிகள், பறவைகள், கால்நடைகள் எல்லாமே ஒரு உயிரைக் கொன்று வாழக்கூடியவை தான். ஆனால், அதனாலெல்லாம் அது கொலை செய்கிறது என்று உயிரினங்கள் பேரில் குற்றம் சுமத்த முடியாது. ஏனெனில், அவற்றுக்கு உணவு உற்பத்தி செய்யத் தெரியாது.

ஆனால், அதையே மனிதன் செய்யும்போது குற்றமாகக் கொள்கிறோம். ஏன் என்றால், துன்பத்தைத் தவிர்த்து இன்பமாக வாழ வேண்டும் என்று நம்மால் நினைக்க முடியும். இந்த உணர்வைச் செயல்பாட்டில் கொண்டு வந்தால் அதற்குத் தகுந்தவாறு திட்டமிட்டு வாழக்கூடிய அறிவு மனிதனிடம் இருக்கிறது. இப்போது மனிதனுடைய சிறப்பை உணர்ந்து கொள்கிறோம். இந்தச் சிறப்பை உணர்ந்து பார்க்கும் எவருக்கும் துன்பம் உண்டாகாமல் வாழ்க்கையை அமைத்துக் தொடர்வதோடு, இதெல்லாம் தெரியாமல் துன்பத்தில் உழலும் மற்ற மனிதர்களும் அறிவு மேம்பாடு பெற அருள் தொண்டாற்றுவதற்கு அந்தச் சிறந்த மனிதன் முன்வரும்போது மாமனிதனாகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வி.ரி.மகாலிங்கம் பிறிமியர் லீக் இறுதிப் போட்டியில் யாழ்.பல்கலை அணி



தொடரின் முதலாவது அரை இறுதிப் போட்டி கடந்த வியாழக் கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்ற போது யாழ்.பல்கலைக் கழகஅணிசென்றலைட்ஸ்அணியை 8 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள் ளது.

நாணயச் சுழற்ச்சியில் வெற்றி பெற்ற யாழ்.பல்கலைக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 20 ஓவர்களில் 4 இலக்குகளை மட்டும் இழந்து 173 ஓட்டங்களை பெற்றது.

குருகுலசூரியா-15, செந்தூரன்-30, துவாரகசீலன் ஆட்ட மிழக்காது 62, கஜீன்திரன் ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் ஜேம்ஸ்-03 இலக்குகளை கைப்பற்றினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 20 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றனர்.

அலன்ராஜ்-12, ஜேம்ஸ்-18, ஏடின்-26, ஜெரிக்-13, செல்டன்-39, சுபாஸ் ஆட்டமிழக் காது 14 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் ஜெனன்தன்-04, துவாரகசீலன்-02, சுபேன்திரன்-02, லோகதீஸ்வர்-01 இலக்கினை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு யாழ். பல்கலைக்கழக அணி 4.71 புள்ளிகளையும் சென்றலைட்ஸ் அணி 2.05 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன.

## கரப்பந்தாட்டச்சுற்றுப்போட்டி கிண்ணம் வென்றது ஆவரங்கால் இந்து



இளவாலை வருத்தப் படாத வாலிபர் சங்கம் நடத்திய வி.சிவகுருநாதன் ஞாபகார்த்தமான மாபெரும் கரப் பந்தாட்ட சுற்றுப்போட்டி யின் இறுதி போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி ஆவரங்கால் மத்தி சம்பியன் ஆனது.

## மன்னார் புனித லூசியா ம.வித்தியாலய மாணவர்களுக்கு அமோக வரவேற்பு





அகில இலங்கை ரீதியில் இடம் பெற்ற பாடசாலைகளுக கிடையில் தேசிய ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியில் 16 வயது பிரி வினருக்கிடையிலான போட்டியில் கலந்து கொண்ட மன்னார் புனித லூசியா ம.வி. அணியினர் முத லிடத்தை பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வீரர்களை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழகம், மற்றும் கிராம மக்களின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

வீரர்களுக்கு மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மேல், மன்னார் பிரதேசச் செயலாளர் என்.பரமதாசன், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன், இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவர் ஞானப்பிரகாசம் டேவிட்சன் மற்றும் கிராம மக்கள், என பலர் கலந்து கொண்டு அமோக வரவேற்பளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்



### கலைச்சுடர் நாகராசா இராமச்சந்திரா
### (சிரேஷ்ட ஊடகவியலாளர், J.P)

வடமராட்சி அல்வாயை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, மண்டைதீவை வதிவிடமாகவும் தற்பொழுது கலைமணி வீதி, கட்டைப்பிராயை வாழ்விடமாகவும் கொண்ட நாகராசா இராமச்சந்திரா கடந்த (07.10.2017) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா - அன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும், நவரத்தினராசா (முன்னைநாள் கிராம அதிகாரி - மண்டைதீவு) - தில்லைநாயகி தம்பதியினரின் பாசமிகு மருமகனும், சிறிரங்கராணி (ஒய்வுநிலை அழகியல் உதவிக்கல்விப் பணிப்பாளர் - தீவக வலயம்) அவர்களின் பாசமிகு கணவரும், பரமேஸ்வரி, சுசீலாதேவி, நாகேஸ்வரநாதன், யசோதரி (கனடா) ஆகியோரின் சகோதரரும், சிதம்பரராணி, காலஞ்சென்ற மதுரராணி மற்றும் மங்களராணி, நவ.பாலகோபால் (பிரதம முகாமைத்துவ உதவியாளர் ஒய்வுநிலை), ஜெயகோபால் (பிரான்ஸ்), இராசகோபால் (கனடா), காலஞ்சென்ற முத்துராணி (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும், பிருந்தகுமாரி (சுவிஸ்), வினோதராஜ் (ஆசிரியர் - அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அகிலன் (சுவிஸ்), சாம்பவி (காப்புறுதி உத்தியோகத்தர் - எச்.என்.பி அஸ்சூரன்ஸ் மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அரங்கன், அரிச்சனா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2017) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிருந்தாவனம், கலைமணி வீதி,
கட்டைப்பிராய், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 902 5712

## மரண அறிவித்தல்



### திருமதி
### ஜோசப்பின் சூசைப்பிள்ளை (அன்னக்கிளி)

பாஷையூரைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜோசப்பின் சூசைப்பிள்ளை அவர்கள் 06.10.2017 அன்று பாஷையூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேக்கப் - சூசைப்பிள்ளையின் (அழகையா மாஸ்ரர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருட்தந்தை L.B இராயப்பு அ.ம.தி, L.B பிலிப் மற்றும் திருமதி செபஸ்ரியம்மா பாலதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி பிலோமினா பிலிப், அன்ரனி பாலதாஸ் (அண்ணாவியார்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி டிவ்னா ஆனந்தன் (ராஜினி), றொபேட், றொசாய்றோ (குணம்), ஜெயம், தனம், அருள் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜோக்கிம் இருதயானந்தன், அனஸ்ரி, Dr. சாந்தினி, ஜஸ்மின், றேணுகா, விஜி ஆகியோரின் அன்பு மாமியும் அருட்தந்தை பாலதாஸ் பிறையனின் பெரியம்மாவும் அருட் சகோதரி பவுலா அன்ரனியின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு எதிர்வரும் (11.10.2017) புதன்கிழமை பி.ப 3.30 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

795, பீச் றோட், பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

(956)

தகவல்: பிள்ளைகள், குடும்பத்தினர்
077 780 2433

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லாட்சிக்கு எதிராக...

அம்பாந்தோட்டையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொண்டதாக குற்றம் சாட்டிய அவர் உண்மையை மறைக்கும் அரசாங்க தரப்பினரின் கருத்துக்களுக்கு பதிலளிக்கப்போவதில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

மத்தள விமான நிலையம் உட்பட நாட்டின் தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யக்கூடாது என்பதை வலியுறுத்தி அம்பாந்தோட்டையில் நடத்தப்பட்ட போராட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டு கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் செய்யப்பட்டது.

இதில் 28பேர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 16ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட நாமல் ராஜபக்ஷ எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார். (மு)

## ஒற்றையாட்சி...

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு மின்னஞ்சல் மூலம் செவ்வி அளித்துள்ள அவர்,

ஏகிய ராஜ்ய (Unitary State) என்ற சிங்கள சொல், எக்சத் ராஜ்ய என்று புதிய அரசியலமைப்பில் மாற்றப்பட வேண்டும்.

இலங்கை ஒருபோதும் ஒற்றையாட்சி நாடாக இருந்ததில்லை. தனித்தனியாக வாழ்ந்த பல மக்கள் குழுமங்கள் பிரித்தானியர்களால் ஒன்றாக கொண்டு வரப்பட்டனர். பின்னர் பெரும்பான்மை சமூகத்தினரால் ஒற்றையாட்சி திணிக்கப்பட்டது.

எனவே, அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அரசியலமைப்பை உருவாக்கும் போது. இந்த நாட்டில் வித்தியாசமான அலகுகள் பிரித்தானியர்களால் ஐக்கியப்படுத்தப்பட்டனர் என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதனால் தான், ஐக்கியம் அல்லது எக்சத் (United) என்ற் சொல்லை நாம் பயன்படுத்த வேண்டும்.

இத்தகைய மாற்றம் சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையை உருவாக்கும்.

ஐக்கிய (எக்சத்) என்ற சொல் பயன்படுத்தப்பட்டால், சிங்களத் தலைவர்களின் இதயங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மு)

## மாகாணங்களை...

ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்களை மட்டுமல்லாது நாட்டில் உள்ள எந்தவொரு மாகாணத்தையும் இணைப்பதற்கு தாம் சம்மதிக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்ட விடயத்தை தெரிவித்திருந்தார். இங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

யுத்தம் நிறைவடைந்த போதும் தமிழ் மக்களது எந்தவொரு பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை. அவ்வாறு தீர்த்து வைப்பதற்கு அரசாங்கமும் தற்போதுள்ள வடக்கு மாகாண சபையும் முன்வரவில்லை. நாம் வடக்கில் மக்களோடு நடத்திய சந்திப்புக்களினூடாக இந்த விடயத்தை எம்மால் தெளிவாக புரிந்து கொள்ள கூடியதாக இருந்தது.

குறிப்பாக தற்போதுள்ள அரசாங்கம் ஆட்சியமைக்கும்போது புதிய அரசியல்யாப்பொன்றை உருவாக்குவதாக கூறியிருந்தது. அவ்வாறு இவ் அரசாங்கம் கூறியது போன்று ஓர் அரசியல் யாப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள நிலையில் இவ் அரசியல் யாப்பானது மக்களது ஜனநாயகத்தையும் உரிமைகளையும், சமத்துவத்தையும் ஏற்படுத்துவதாக காணப்பட்டால் அதனை மக்கள்விடுதலை முன்னணியானது ஆதரிக்கும்.

இந்நிலையில் தற்போது அதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ள போதும் நாட்டிலுள்ள இனவாதிகளின் செயற்பாட்டால் அதிலும் தடை ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் நாம் இவ் இனவாத செயற்பாட்டை தோற்கடிக்க வேண்டிய நிலையில் உள்ளோம் எனத் தெரிவித்தார். (மு-4)

## கைதிகளை விடுவிக்க...

திகதி ஏற்படுத்தப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் 2.1.1. சரத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் வேறு அவசரகால சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் போராளிகளுக்கும், குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கும், வழக்கு தொடரப்பட்டவர்களுக்கும் அல்லது இச் சட்டங்களின் கீழ் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களுக்கும் இலங்கை ஜனாதிபதி பொது மன்னிப்பு வழ்ங்குவார். இலங்கை அரசு இளம் போராளிகளுக்கு தேசிய வாழ்விற்கு திரும்பக் கூடிய வகையில் புனர்வாழ்வு அளிக்க விசேட கவனம் செலுத்தும். இதற்கு இந்திய அரசு ஒத்துழைப்பு வழங்கும் எனக் குறிப்பிட்டதற்கமைவாக தாங்கள் உடன் நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு பொது மன்னிப்போ அல்லது நிபந்தனையுடன் கூடிய விடுதலையையோ அளித்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்படி தங்களை கேட்டுக்கொள்கின்றேன்.

இல்லாவிடில் விரும்பத்தகாத ஒரு சில சம்பவங்களை நாடு சந்திக்க வேண்டி நேரிடுமென நான் அச்சமடைகின்றேன் என தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கோரியுள்ளார். (மு)

## தொலைபேசி மூலம்...

டில் இருந்த குறித்த இளைஞனுக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது. அதில் குறித்த நபருடைய நண்பன் கூழாவடி பகுதியில் விபத்தில் காயமடைந்துள்ளதாகவும் உடனடியாக அந்த இடத்துக்கு வருமாறும் கூறியுள்ளார்கள். அப்போது குறித்த இளைஞனும் அவரது தம்பியும் அவ் இடத்துக்கு சென்ற போது அங்கு எந்த விபத்தும் இடம்பெறவில்லை.

அங்கிருந்து அவர்கள் திரும்பிச் செல்லும் போது 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேர் சரமாரியாக வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். தம்பி அவ்விடத்தை விட்டு தப்பி சென்றதால் அவர் மீது தாக்குதல் இடம்பெறவில்லை. கைகளில் படுகாயமடைந்த குறித்த இளைஞன் அங்கிருந்தவர்களால் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மு-9,4)

## தமிழ் அரசியல்...

அதேவேளை அவர்களுக்கு ஆதரவாக கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் இன்று ஒருநாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில், யாழ்ப்பாணத்தை சேர்ந்த இராசதுரை திருவருள் (வயது 40) கரணவாயை சேர்ந்த மதியரசன் சுலக்ஸன் (வயது 30) நாவலப்பிட்டியை சேர்ந்த கணேசன் தர்சன் (வயது 26) ஆகியோர் கடந்த 25ஆம் திகதியில் இருந்து இன்று வரை 15ஆவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

மேற்குறித்த அரசியல் கைதிகள் மூவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2009 ஆண்டு கைது செய்யப்பட்டு கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து இவர்களுடைய வழக்கு வவுனியா நீதிமன்றில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தினர் தற்போது அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றியுள்ளனர். அங்கு மொழிப்பிரச்சினை உள்ள காரணத்தினால் பாரிய சிக்கலை எதிர்கொள்ள நேரிடும் என தெரிவித்து தமது வழக்கு வவுனியா அல்லது யாழ்ப்பாண நீதிமன்றங்களில் நடைபெற வேண்டும் என கோரி உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்கின்றனர்.

இவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் இவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழ் அரசியல் தலைவர்கள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என கோரி யாழ்.பல்கலை சமூகம் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அதனை தொடர்ந்து வடக்கு மாகாண சபையில் குறித்த விடயம் தொடர்பாக விசேட பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் கைதிகளை நேரில் சென்று பார்வையிட்டு போராட்டத்தை கைவிடுமாறும் கேட்டிருந்தனர்.

இந்த விடயத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் உரிய முடிவை பெற்றுத்தரும்வரை தாம் போராட்டத்தை கைவிடப்போவதில்லை என கைதிகள் தெரிவித்ததுடன் தமது போராட்டத்தை தொடர்கின்றனர்.

இந்த நிலையில் வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் ஒன்று கூடி இன்று போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

குறித்த போராட்டம் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

இதே வேளை கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உள்ள 70 தமிழ் அரசியல் கைதிகளும் இன்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். (மு-9)

## தமிழ் அரசியல்...

என்று அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் கொடுப்போம் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அநுராதபுரம் சிறையில் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் முன்னெடுத்து வருகின்றனர், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இது குறித்து அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

அரசியல் கைதிகளின் பிரச்சினை மிகப் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. மனித நேயத்தின் பிரகாரம், அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்ய வேண்டுமென குரல் கொடுத்துள்ளோம்.

கடந்த காலங்களில் ஒரு சிலரை விடுதலை செய்வதற்கும், வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

இன்றும் சிறையில் இருப்பவர்கள் பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். பல ஆண்டுகளாகவும், சிறைக் கைதிகளாக இருக்கின்றார்கள்.

அவர்கள் அனுபவித்த துன்பங்கள் போதும், சிறைகளில் உள்ள அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென அரசிற்கு அழுத்தங்கள் கொடுத்து வருகின்றோம் என்றார் அவர். (மு)

## கொட்டும் மழை...

டம் நேற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக 215ஆவது நாளாக தொடர்ந்து வருகிறது.

தமது உறவுகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை தமது போராட்டத்தை கைவிடப்போவதில்லை என தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்தியுள்ளனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்த, இராணுவத்திடம் கையளித்த கைது செய்யப்பட்ட மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் இவர்களின் போராட்டத்துக்கு எந்தவித பதில்களும் கிடைக்காத நிலையில் நேற்று மாலை பெய்த அடை மழைக்கு மத்தியிலும் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு-281)

## புதிய அரசமைப்பை...

மகிந்த அணியின் பிரதான அரசியல் செயற்பாட்டாளர்களின் ஒருவரான ஜீ.எல். பீரிஸ் தலைமையில் மகிந்த அணியின் உறுப்பினர்கள் ஒன்று கூடி கலந்துரையாடியுள்ளனர்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் பொது மக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் சில குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இராணுவத்தினரின் உதவியுடன் இந்த முயற்சியைத் தோற்கடிக்க பேச்சுகளை முன்னெடுக்கும் வகையில் சிறப்புக் குழுவொன்றை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு பின்னர் விரைவில் இராணுவத்தினருடன் பேச்சுகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அறியமுடிகிறது.

முன்னதாக அரசு தரப்பிலும் இராணுவத்துடன் புதிய அரசியலமைப்புக் குறித்து தெளிவுபடுத்த நகர்வுகள் இடம்பெற்று வருகின்றன. (மு)

## சிறுமியின் முகத்தில்...

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 04, மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

புதுக்குடியிருப்பு மந்துவில் 08ஆம் வட்டாரத்தில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் நடைபெற்ற ஆசிரியர்தின விழாவில் கலந்து கொண்டு விட்டு தனது வீடு நோக்கி ஆள் நடமாட்டம் குறைந்த குறுக்கு வீதி வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்த 07ஆம் தரத்தில் கல்வி பயிலும் 13 வயதுடைய மாணவி ஒருவர் மீது 02 மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நபர்களில், ஒரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மாணவியின் முகத்தின் மீது மிளகாய் தூளை வீசிவிட்டு சென்ற போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் நபர்கள் மாணவியின் கழுத்தில் அணிந்திருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தினை அடுத்து மாணவி எழுப்பிய அபயக்குரல் கேட்டு ஓடி வந்த பொது மக்கள் மாணவியை மீட்டு முதலுதவி சிகிச்சை அளித்ததுடன் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கும் தகவலை வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிசார் மற்றும் பிரதேச இளைஞர்கள் பலத்த தேடுலை மேற் கொண்ட போதும் திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் புலன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (மு-15)

## மூவரின் உடல்நிலை...

தாம் அருந்தி வந்த குடிநீரையும் அவர்கள் ஒறுத்து போராட்டத்தை தொடர்ந்திருந்த நிலையில் மதியம் அவர்கள் உடல்சோர்வுற்று மயக்கமடைந்திருந்தனர்.

இதனையடுத்தே அவர்களினை சிறைச்சாலை நிர்வாகம் அச்சம் காரணமாக அநுராதபுரம் அரசினர் வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்துள்ளது.

முன்னதாக சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர்களிற்கு ஆரம்ப கட்ட வைத்திய சிகிச்சைகள் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் சிறைச்சாலை வைத்தியர் கைவிரித்ததையடுத்தே அவசர அவசரமாக அநுராதபுரம் அரசினர் வைத்தியசாலையில் நேற்றிரவு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சனிக்கிழமை அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று உணவு தவிர்ப்பை கைவிடுமாறு விடுத்த கோரிக்கை அரசியல் கைதிகளினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

அநுராதபுரம் சிறையில் உணவு தவிர்ப்பில் ஈடுபடும் 3 அரசியல் கைதிகளும் கைதிகளாக இருக்கும் சந்தர்ப்பத்தில் இது 11 ஆவது தடவையாக அவர்களால் மேற்கொள்ளப்படும உணவு தவிர்ப்பு போராட்டமாகும்.

தற்போது கோருவது விடுதலையோ அல்லது ஒரு தண்டனைக்குறைப்போ அல்ல. மாறாக வழக்கு நடவடிக்கைகள் நாளை 9ம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் குறித்த வழக்கினை அநுராதபுரம் நீதிமன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது. அதனை வவுனியா மேல் நீதிமன்றில் இருந்து அநுராதபுரத்திற்கு மாற்றியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இவ் உணவு தவிர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதைக் கூட எம் அரசியல் தலைவர்களால் மேற்கொள்ள முடிய வில்லையே என பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுகிறது. (மு-250,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Chemistry K.Subeesan

### தொடர் பரீட்சை இலக்கம் 01

### 2019 (A/L) Maths & Bio

| Full Name | Marks | Rank |
|---|---|---|
| Hevarasa Sangaran | 97 | 1 |
| Sivaneshwaran Sarmilan | 97 | 1 |
| Shankavi Kanthappu | 87 | 3 |
| Thiriloganathan Manimohan | 87 | 3 |
| Thilaxsana Tharmaseelan | 87 | 3 |
| Nilani Sriskandharajah | 87 | 3 |
| Thevajini Puvanendran | 83 | 7 |
| Anpalakan Akimsan | 83 | 7 |
| Thanabalaratnam Renujan | 83 | 7 |
| Dushara Maniseharan | 83 | 7 |
| Nishanthini Kanthakumar | 80 | 11 |
| Raveendran Akileshan | 80 | 11 |
| Kajoora Shanthakumar | 80 | 11 |
| Pakeerathan Pirunthan | 80 | 11 |
| Yogalinkan Kanushan | 80 | 11 |
| Kajeepa Parameshwaran | 80 | 11 |
| Anoja Ravichandran | 70 | 17 |
| Kirubakaran Kopishan | 70 | 17 |
| Kajana Kanagaratnam | 70 | 17 |
| Maheswaran Yathurshan | 70 | 17 |
| Kathirgalinkam Kethushan | 70 | 17 |
| Kandasamy sujith | 67 | 22 |
| Ajantha Neekkilas | 67 | 22 |

Science Ocean
ஊரெழு - கொக்குவில்
Science Corner
CLOCK TOWER LANE - JAFFNA
(935)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9864)



கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கொங்கிறீற் கல்லு அறுக்கும் மெசின் உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 078 615 5929 (955)

THINK 2WICE ASSOCIATION - UK
Little Aid CHARITY NR 1129695 United Kingdom

## இலவச திறன் விருத்தி மையம்

3 இலவக் கற்கை நெறிகள் | 12வது அணிக்குரிய வகுப்புக்கள்

ஆரம்பம் : 14.10.2017 , சனி காலை 10 மணி

1. இலவச கணனி கற்கை நெறி
Diploma in Computer Application
-Fundamental, Word, Excel, Power point, Access, Internet email -
Free

2. இலவச கணனி கற்கை நெறி
Diploma in Hardware Technology
Free

3. இலவச தையல் கற்கை நெறி
Diploma in Computer Application
பயிற்சி காலத்தில் பயிற்சிக்குரிய உபகரணங்கள் அனைத்தும் இலவசம்
Free

கையேடுகள் இலவசம்
பிரித்தானியாவிலிருந்து சான்றிதழ்கள்
சிறந்த மாணவனுக்கு தங்க விருது

பதிவுகளுக்கு : 077 999699

இடம்:
லிட்டில் ஏய்ட் இலவச கணனி பயிற்சி மையம்
கல்விப் பண்பாட்டு அபிவிருத்தி மன்றம்
கனகராசா வீதி, திருநகர் வீதி, கிளிநொச்சி
(C-9940)


## 10 இந்...

ரால்கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பயணித்த படகையும் இலங்கை கடற்படையினர் கைப்பற்றினர்.

நெடுந்தீவுக்கு தென் கிழக்கேயுள்ள இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடிக்கும் போது கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களையும் ஊர்காவற்றுறை நீதிமன்றபதில் நீதவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவனின் வீட்டில் ஆஜர்படுத்திய போது அவர்களின் வழக்கை விசாரித்த நீதிமன்ற நீதவான் 10 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (மு)


## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி ,எண்ணை வகை,மருந்துப் பொருட்கள்,பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை

(C-9935)

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

## அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் வீதி, சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113


# கண்ணீர்க் காணிக்கை



## முருகேசு கார்த்திகேசு

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலாளரும் நல்லூர் / கோப்பாய் கிளையை சேர்ந்த நந்தினி பேக்கரி உரிமையாளராகிய திரு.கா.பாஸ்கரன் அவர்களின் அன்பு தந்தை **முருகேசு கார்த்திகேசு** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(C-9937)

**நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள், பணியாளர்கள், யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.**

குறிப்பு : அன்னாரின் இறுதிக்கிரியை 01ம் குறுக்குத்தெரு, மணியந்தோட்டம், கொழும்புத்துறையிலுள்ள அவரது இல்லத்தில் 2017.10.09 ந் திகதி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை சங்கத்தின் அங்கத்தவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : இ.பேரின்பநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.